பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

வலம்புரி

The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 09 திங்கட்கிழமை (23.06.2003) தொலைபேசி - 2223378 ஒலி 186

# ஹெல்கீசன், எரிக்சோல், பிளேயர் மூவரையும் பிரதமர் ரணில் சந்திப்பார்

## நாடு திரும்பியதும் இடைக்கால சபை வரைபு தயாரிப்பு



(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு லண்டன் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகிய இருவரையும் இன்று லண்டனில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பின் போது இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகவும் தேக்க நிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் பிரதமர் ரணில் ஆராயவுள்ளார்.





நாளை இடம்பெறும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிப்பிளேயருடனான சந்திப்பின் போது இடைக்கால நிர்வாக சபை தொடர்பான சட்டப் பிரச்சினைகள் பற்றிய ஆலோசனைகளையும் பெற இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தனது லண்டன் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான சட்ட வரைபு தயாரிக்கப்பட்டு அது விடுதலைப்புலிகளின் பார்வைக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை விடார்ஹெல்கீசன், எரிக் சொல்ஹெய்ம் ஆகிய இருவரும் வன்னியில் விடுதலைப்புலிகளை சந்திப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.(வ)



# மீண்டுமொரு யுத்தத்திற்கு புலிகள் தயாராகின்றனர்!

## ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

(நமது நிருபர்)

**அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சுவார்த்தை ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் மீண்டும் ஒரு யுத்தத்திற்குப் புலிகள் தங்களைத் தயார்படுத்தி வருகிறார்கள் என பாதுகாப்புப் பிரிவினரும், புலனாய்வுத் துறையினரும் என்னிடம் தெரிவித்துள்ளனர். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.**

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 14வது தேசிய மகாநாடு நேற்று நித்தம்புவவில் நடைபெற்ற போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் ஜனாதிபதி முக்கியமான நான்கு விடயங்களைத் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளிற்கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து, விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. அவர்கள் மீண்டும் ஒரு யுத்தத்திற்காக தம்மைத் தயார்ப்படுத்திவருவதுடன் ஆயுதங்களையும் பெருமளவில் குவித்து வருகின்றனர். இதனைப் பாதுகாப்புப் பிரிவினரும், புலனாய்வுப் பிரிவினரும் என்னிடம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் உத்தியோகப் பற்றற்ற தமிழீழம் ஒன்றை விடுதலைப்புலிகளிற்கு வழங்க முயற்சி செய்து வருகிறது. ஆனால் எனது தலைமையின் கீழ் அமையவுள்ள அரசாங்கம் சகல இனமக்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவாத்தைக்கான (10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுவின் புதிய உறுப்பினர்கள் வருகை

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடற்கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட போதிய ஆளணி இல்லாமையால் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்தே உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

குழுவில் புதிதாக அங்கம் வகிக்கவென 9 கண்காணிப்பாளர்கள் தற்பொழுது கொழும்புக்கு வந்துள்ளதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (ந-5)

# ரி.எம். சௌந்தரராஜன் தற்கொலை முயற்சி

(சென்னை)

தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகர் ரி.எம். சௌந்தரராஜன் தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றப்பட்டு அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மனஉழைச்சல் நோயினால் படிக்கப்பட்டிருந்த பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் தனது வீட்டிலிருந்த எரிசாயம் அருந்தியதையடுத்து அவர் உடனடியாக அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னணிப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் 50 வருடங்களுக்கு மேலாக ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

இதேவேளை ரி.எம்.சௌந்தரராஜன் தற்கொலைமுயற்சியில் ஈடுபட்டார் என்பதை அவரது மகன் பல்ராஜ் மறுத்துள்ளார். (வ)

# இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்து மக்களும் முன்வரவேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி வேண்டுகோள்

(நமது நிருபர்)

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் பங்கம் ஏற்படாத வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நாட்டில் உள்ள அனைத்து மக்களும் முன்வர வேண்டும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் உடுகம புத்த தக்ஷித தேரர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் ஏற்பாட்டில் சமாதான பாதை யாத்திரையொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரும் அஸ்கிரிய பீடாதிபதி அதிவண. உடுகம புத்த தக்ஷித தேரர் மேற்கண்டவாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இப் பாதை யாத்திரையும், பொதுக் கூட்டமும் இம் மாதம் 28,29ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக அஸ்கிரிய பீடாதிபதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்து மக்களும், தென் பகுதி மக்களும் ஒருமைப்பாட்டுடன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துதற்காகவே நான் யாழ். விஜயத்தை மேற்கொண்டுள்ளேன். குறைபாடுகள் உள்ள தரப்பினருடன் கலந்து பேசி குறைபாடுகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். இத் தீர்வு இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு உட்பட்டதாக இது இருப்பதற்கு அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# புங்குடுதீவுக் கடலில் சடலம் கரை ஒதுங்கியது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கோரளை கடற்கரையில் அழுகிய நிலையில் கரையொதுங்கிய சடலம் ஒன்று ஊர்காவற்றுதுறைப் பொலி ஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தலையற்ற நிலையில் முண்டமாக காணப்படும் இச்சடலம் நேற்றுக் காலை 11.00 மணியளவில் கரையொதுங்கியது.

இச்சடலத்தில் நீலநிற நீலக்காற சட்டையும் வெள்ளை நிறத்தில் நீலக் கோடிட்ட மேற்சட்டையும் காணப்படுகிறது.

சடலம் இனம் காணும் பொருட்டு யாழ்போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.(த-4)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஜனாதிபதி – பிரதமர் சந்திப்பில்

# இடைக்கால நிர்வாகம் குறித்து சரியாக தெளிவுபடுத்தப்படவில்லை

## ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்படும் இடைக்கால நிர்வாக கோரிக்கையை வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரும்பம் தெரிவித்துள்ள போதும் அக்கோரிக்கையினை சில நிபந்தனைகளுடனேயே வழங்க வேண்டும் என தெரிவிப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையிலான சந்திப்பில், இடைக்கால நிர்வாக சபையை·வடக்குக் - கிழக்கிற்கு வழங்குவது தொடாபாக இருவராலும் பரிமாறப்பட்ட கருத்துக்கள் குறித்து ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ் பீரிஸ் பி.பி.சிக்கு வழங்கிய போட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிகையில்,

பிரதமர், ரணில் விக்கிரமசிங்கா இடைக்கால நிர்வாகம் பற்றி ஜனாதிபதியுடன் நீண்டநேரம் பேசினார்.

ஆனாலும், வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகத்தினை வழங்குவது குறித்து எவ்விதமான திட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பவிருக்கிறோம் என்ற விடயத்தை ஜனாதிபதிக்கு தெளிவாக அவர் கூறவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி இடைக்கால நிர்வாகம் பற்றிய தமது நிலைப்பாட்டை எவ்வாறு உறுதியாக கூறமுடியும்?

இருப்பினும், தமிழீழ விடுதலைப புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தை சில நிபந்தனைகளுடன் வழங்க ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு ஆயுதங்களை கையளிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட அரசியல தீர்வு உருவான பின்பு அதனைப் புலிகள் ஏற்றுக் கொண்டு இடைக்கால நிர்வாக சபையை அமைக்க இணங்க வேண்டும்.

அவ்வாறு இடைக்கால நிர்வாக சபையை அமைக்கும் பட்சதில் சகல சமூகங்களிற்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் . அத்துடன் இந்த அமைப்பு ஜனநாயக முறையில் மனித உரிமையை மதித்து நடக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகளையே ஜனாதிபதி விதித்துள்ளார் என்று குறிப்பிட்டார். (உ-10)

விமான நிலைய வரி

# ஜூலை முதல் அதிகரிக்கும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை 1ம் திகதி தொடக்கம் விமான நிலையவரி 1000 ரூபாவிலிருந்து 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் அதிகரிக்கப்பட்டுள்ள விமான நிலைய வரி காரணமாகவே இவ் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டதாக இலங்கை விமான நிலைய அதிகாரி டயஸ்கமவாசம் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் கிடைக்கும் மேலதிக வருமானம் கொழும்பு விமான நிலையத்தை அபிவிருத்தி செய் பயன்படும். இதன்படி சார்க் நாடுகளின் விமான நிலைய வரியுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் அறவிடப்படும் இவ் வரி உயர்வாகவேயுள்ளது.

இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், பர்மா, நேபாளம், பாகிஸ்தான்,மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்திய விமான நிலையத்தில் 150ரூபா மட்டுமே அறவிடப்படும் அதேவேளை ஏனைய நாடுகளைச் சேர்ந்தோரிடம் 500 ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது. இலங்கையைப் போலவே நேபாளம், பூட்டான், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் 1000 ரூபாவும், பாகிஸ்தானில் 3200 ரூபாவும் விமானநிலைய வரியாக வசூலிக்கப்படுகிறது.

சில ஐரோப்பிய நாடுகள் இவ் வரியை வசூலிப்பதில்லை. இதேவேளை இலங்கை விமானநிலையம் கூடுதல் வருமானத்தைப் பெறவிரும்பின் சார்க் அல்லாத நாடுகளிலிருந்து வரும் ஒவ்வொருவரிடமும் 500ரூபாவை கூடுதலாக வசூலிக்கலாம் என்று பலசர்வதேச விமான சேவைக் கம்பனிகளும் பிரயாண நிறுவனங்களும் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளன. (இ)

# இரவு வேளைகளிலும் இராணுவம் குடிமனைகளில் சோதனை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இன்பருட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த சில நாட்களாக பருத்தித்துறையை அண்டிய கடற்கரை பிரதேசங்களிலும், ஊர்மனைக்ளிலும் இராணுவத்தினர் இரவு வேளைகளில ஏழு, எட்டு,இராணுவத்தினர் குழுக்களாக சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, பகல் வேளைகளில் அப்குதிகளில் நடமாடும் மக்களின் அடையாள அட்டைகளைப் பரிசோதிப்பதிலும், விசாரணை செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அப்குதிகளில் உள்ள மக்கள் பீதியடைந்துள்ளதாகவும், இராணுவத்தினரின் நடவடிக்கைகளுக்கு எதிர்பபுத் தெரிவித்து வருவதாகவும் தெரிய வருகிறது. (பி)

# துண்டி மயானத்தை அண்டி புதிய காப்பரண்கள் அமைப்பு

(கொழும்புத்துறை)

துண்டிச் சந்தியில் இருந்து துண்டி மயானம் வரையுள்ள பகுதிகளில் தற்போது புதிய காப்பரண்கள் அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி வீதி, மக்கள் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள பகுதி என்ற போதிலும், இறந்தவர்களை தகனம் செய்வதற்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

அங்கு செல்கின்ற மக்கள், இராணுவத்தினர் தற்போது அங்கு புதிய காப்பரண்களை அமைத்துள்ளதைக காணக்கூடியதாக உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, கொழும்புத்துறை 3ஆம் குறுக்கிலும் யாழ். நகரக் கரையோரப் பகுதிகளிலும் கொங்கிறீட கற்கள், குற்றிகள், மேலும் சில பொருட்களின் மூலமும் புதிய காப்பரண்களை இராணுவத்தினர் அமைத்து வருவதையும், அதிக மின்குமிழ்கள் அப்பகுதிகளில் பொருத்தப்பட்டு இரவு நேரங்களில் ஒளிர விடப்படுவதையும் காணக்கூடியதாய் உள்ளது. (உ-51)

# செப்ரெம்பரில் பிரதமர் ரணில் அமெரிக்காவுக்கு பயணம்

## ஐ.நா.கூட்டத்தில் கலந்துகொள்வார்

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் 16ல் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது. அவரின் விஜயத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷையும் சந்திப்பார்.

கடந்த வருடம் இடம்பெற்ற பிரதமரின் அமெரிக்க விஜயத்தின் போது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கொபி அனானினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தார். பிரதமரின் விஜயத்திற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளவென தற்போது கிரீசில் தங்கியுள்ள பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொட வாஷிங்டனுக்குச் செல்வார் என தெரிவிக்கப்படுகிறது. அங்கு அமைச்சர் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிடேஜையும் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்திப்பார். இதற்கிடையில் ஒரு வாரகால உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் லணடன் சென்றுள்ளர்.அங்கு அவா பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரை யும் சந்திப்பார். ஆனால் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பால சிங்கத்துடன் சந்திப்புக்கள் எதுவும் இடம்பெற மாட்டாதென கூறப்படுகி றது.

அமைச்சர் மிலிந்த மொறகொட தனது புத்தக வெளியீட்டிற்காக கடந்த செவ்வாயன்று கிரீசிற்குச் சென்றிருந்தார். அங்கு கடந்த வியாழனன்று நோர்வே வெளியுறவு அமைசசர் ஜோன் பீற்றர்சனால் புத்தகம் வெளியிடப்பட்டது. (பி)

ஹெலோட்றெஸ்ட்ஸ் நிறுவனத்தினால்

# கடந்த எழு மாதங்களில் குடாநாட்டில் 4657வெடிபொருட்கள் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் சேவையாற்றிவரும் ஹெலோட் றெஸ்ட்ஸ் நிறுவனம் (மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு) கடந்த ஏழு மாதங்களில் இனங்காணப்பட்ட 10வலயங்களில் 4ஆயிரத்து 657 வெடிபொருட்களை அகற்றியுள்ளது.

மேற்குறித்த விடயம் பற்றி ஹெலோட்றெஸ்ட்ஸ் யாழ் மாவட்ட நிர்வாக மற்றும் பொறியியல் பிரிவு மேற்பார்வையாளர்களான சங்கர், ஜெயகுமார் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில், மனித மற்றும் இயந்திர சாதனங்களின் உதவியுடன் நாம் இப்பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இதுவரை மனித வலுச்சோதனைக்கு 15ஆயிரத்து 718சதுரமீற்றர் நிலப்பரப்பும் சாதாரண நிலைமைச் சோதனைக்கு 20ஆயிரம் சதுர மீற்றர் நிலப்பரப்பும் இயந்திரத்தினூடான சோதனைக்கு 7ஆயிரத்து 165 கனமீற்றர் நிலப்பரப்பும் உட்படுத்தப்பட்டுள்ளது. இதில் 4ஆயிரத்து 183 மனிதர்களுக்கெதிரான மிதிவெடிகளும் 6-தாங்கி எதிர்ப்பு வெடி பொருட்களும், ஏனைய வெடிகுண்டுகள், ஷெல்கள், உட்பட 468 வெடி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 10வலயங்களில் இருபாலை, கைதடி, நுணாவில் யாழ் திறந்த பல்கலைக்கழகப் பகுதி முகமாலை என்பனவற்றில் கண்ணிவெடி அகற்றும் பணி பூர்த்தியாகிவிட்டது.

நாவாந்துறை, கோப்பாய் -1, கோப்பாய் -2, அரியாலை, இருபாலை -2 ஆகிய வலயங்களில் தற்போது கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள இளைஞர்களை பயிற்றுவித்தே இக் கண்ணி வெடியகற்றும்பணியை ஹெலோட் றெஸ்ட் ஸ் நிறுவனம் துரிதமாக மேற்கொண்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## கைத்தொலை பேசியை கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கையடக்கத் தொலைபேசிகளைக் கடத்த முயன்ற சந்தேக நபர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

விமான நிலையப்பணிகளை பரிசோதனை செய்தபோதே இச் சந்தேக நபர் கைதுசெய்யப் பட்டதாகவும் சந்தேகநபர் நூற்றுக்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருந்தாகவும் பிரதிச் சுங்கப்பணிப்பாளர் கே.ஏ.தர்மசேன தெரிவித்துள்ளார். (க-10)

# ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எதிர்க்கட்சிகள் அக்கறை காட்டுவதில்லை

## கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அதிகாரத்தில் உள்ள மாகாண சபைகளின் முதல் அமைச்சர்கள் சிலர் கல்வி அமைச்சின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர். இவ்வாறு கல்வி அமைசசர் கருணாசேன கொடித்துவக்கு மொறட்டுவ பெல்ஸ்குமார கல்லூரியில் இடம் பெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், சில பாடசாலைகளில தேசிய தகவல் தொழில் நுட்ப மத்திய நிலையங்களை நிர்மாணிப்பதற்கு கூட இவர்கள் ஆதரவு வழங்குவதில்லை. அத்துடன் தங்கள் பிள்ளைகளை வெளிநாட்டு சர்வதேச பாடசாலைகளிலும் பிரபல பாடசாலைகளிலும் கல்விகற்பதற்காக சேர்த்துள்ள இவர்கள் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருப்பதே கவலைக் குரியதாகும்.

இதேவேளை இவர்கள் மட்டுமன்றி பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பல அரசியல்வாதிகள் எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்களுக்கு தொடர்ந்து ஆதரவு தருவதில்லை என்றார். (க-10)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ச் சங்கம் நடாத்தும் விபுலானந்தர் ஞாபகார்த்த கூடைப்பந்துச் சுற்றுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 29ஆம் திகதி வரை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

ஏழு விளையாட்டுக் கழகங்களை உள்ளடக்கிய இரு குழுக்களுக்கிடையே இன்று நடைபெறும் போட்டிகளின் மாலை 3.30 ஜோனியன்ஸ் எதிர் ஜொலி ஸ்ரார் 4.30 இற்கு யுனிவசிற்றி எதிர் சென்ரலிஸ்ற், 5.15 இற்கு பற்றீசியன் எதிர் கிறாஸ் கொப்பஸ விளையாட்டுக் கழகங்கள் மோதவுள்ளன.(உ-15)

செவ்வாய் மாற்றம் எப்படி?

07.08.2003 - 06.10.2003 இலங்கை ராசி கும்பத்தில் இரு மாத வக்கிரயுத்தச் செவ்வாய-சனி குருவை நோக்குவதால் அரசியல் இராணுவ மாற்றங்களையும் போர் முஸ்தீபுகளை உண்டாக்கும் (சத்தியாவின்) சனிமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது.

(C/ 6296)

சிரித்திரனுக்கு பின்பு வெளிவர இருக்கிறது

சுவைத்திரள் நகைச்சுவை ஏடு

இனிய நகைச்சுவை எழுத்தாளர்களிடமிருந்து,

☆ சிரி கதைகள் ☆ சிறுகதைகள் ☆ துணுக்குகள் ☆ நகைச்சுவை நாடகங்கள் ☆ சிரிப்புக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. எமக்கு எழுதும் விடயதானங்களுக்கு சன்மானங்கள் உண்டு. ஆடி 20 இல் யாழ் மண்ணில் விற்பனைக்காக வெளிவரும்.

தொடர்புகளுக்கு:-
திக்கவயல் தர்மு
481, பார் வீதி,
மட்டக்களப்பு.

எமது யாழ்ப்பாண விநியோகஸ்தர்;
வசந்தம் புத்தகசாலை,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6298)

# எண்ணெய்க்குழாய் வெடித்து 100பேருக்கு மேல் பலியாகினர்

## நைஜீரியாவில் நிகழ்ந்த அனர்த்தம்

(அபுஜா)


நைஜீரியாவில எண்ணெய்க் குழாய வெடித்ததில் 100இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள ஒக்ஸியா அம்ஹிஹ" என்ற பிரதேசத்திலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

திருட்டுத்தனமான முறையில் இக் குழாய் வழியாக எண்ணெய் பெற முயன்ற சிலரது தவறான கையாளுகையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ள போதிலும் இது தொழில் நுட்பக் கோளாறு காரணமாகவே ஏற்பட்டதென நைஜீரிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது என்றும் ,

இதேவேளை, கடந்த வியாழக் கிழமை இச்சம்பவம் இடம்பெற்றிருந்தும் அதனை உடன் வெளியிடப் படாமை குறித்து எதிர்க்கட்சிகள் குறைகூறியுள்ளன.

எண்ணெய்வள நாடுகளுக்கான ஒபேக் அமைப்பில் 8வது இடத்தை வகிக்கும் நைஜீரியாவில் கடந்த 4 ஆண்டுகளில் இவ்வாறான எரிபொருள் குழாய் வெடிப்புச்சம்பவங்கள் 4தடவைகள் இடம்பெற்றுள்ளதுடன், பலபேர் இச்சம்பவங்களினால் உயிரிழந்துள்ளனர் என்றும் ரொய்ட்டர் செய்திகள் தெரிவிக்கின்றன. (பி-2)




லண்டனில் உள்ள புத்தக நிலையத்தில் நேற்று முன்தினம் "பாட்டர் அண்டு தி ஆர்டர் ஆப்தி பீனிக்" என்ற நூலை வாங்கிவிட்ட மகிழ்ச்சியில் திளைக்கும் சிறுவனையும், அருகில் இருப்பவர் மத்திரவாதி ஆல்பஸ் டம்பிள்டோர் வேடம் தரித்த ஒருவரையும் இங்கு காண்கிறீர்கள். இப்புத்தகத்துக்காக 3ஆண்டுகளாக காத்திருந்தனர் வாசகர்கள் உலகெங்கும் விற்பனைக்கு வந்துள்ள இப் புத்தகம் ஒரு நாளில் மட்டும் 1லட்சத்திற்கும் மேற்பட்டளவில் விற்பனையாகியுள்ளது.

# வடகொரியாவிடமிருந்து அயல் நாடுகளை பாதுகாக்க அமெரிக்கா முயற்சி


(நியூயோர்க்)

வடகொரியாவின் அச்சுறுத்தலில் இருந்து அயல் நாடுகளைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா தனது பசுபிக் கடற்படைத்தளத்தை ஹாவாயிலிருந்து ஜப்பானுக்கு மாற்றத் தீர்மானித்துள்ளது.

வடகொரியா அதன் அணுவாயுதத்திட்டங்களைக் கைவிடப்போவதில்லையென உலகநாடுகளுக்கு அச்சுறுத்தலைக் கொடுத்துவரும் நிலையிலேயே அமெரிக்கா இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

நவீன புலனாய்வு வசதிகளைக் கொண்ட இந்தத் தளத்தினூடாக ஆசியப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சகல நடவடிக்கைகளையும் ஆராய முடியுமென்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எனினும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் எந்தக் கருத்தினையும் வெளியிடவில்லை. (பி-2)



தென்கொரியத் தலைநகர் சியோலில் சோஹங் வங்கியைத் தனியார் மயமாக்குவதை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்யும் வங்கி ஊழியர், வங்கி அலுவலகத்தின் ஜன்னல் வழியாக தன் மகனுக்கு சொட்டு மருந்து கொடுக்கிறார்.

# வாஜ்பாயும், அத்வானியுமே பாபர் மசூதி இடிப்பதற்கு திட்டம் தீட்டியவர்கள்

## முன்னாள் உத்தரப்பிரதேச முதலமைச்சர் கூறுகிறார்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய், மற்றும் துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி ஆகியோரின் உத்தரவிற்கமையவே பாபர் மசூதி இடிக்கப்பட்டது என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங் தெரிவித்துள்ளார். பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது உத்தரப்பிரதேச முதல்வராக இருந்த கல்யாண்சிங் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டார் என்று பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பான வழக்குகளை விசாரணை செய்து வரும் நீதி மன்ற அரச வழக்கறிஞர் இக்குற்றச்சாட்டை முன்வைத்ததையடுத்தே கல்யாண்சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டது குறித்து இரகசிய திட்டம் தீட்டப் பட்டது என்றும், இந்தச்சம்பவத்திற்கு தமது தலைமையிலான மாநில அரசோ, நரசிம்மராவ் தலைமையிலான மத்திய அரசோ காரணமில்லையென்றும் கல்யாண் சிங் கூறியுள்ளார்.

பாபர்மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்தில் வாஜ்பாய், அத்வானி உட்பட பல அமைச்சர்களது ஈடுபாடுகள் குறித்து விரிவான தகவல்களை தான் வழங்கவிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (பி-2)

# உயிர்த்தியாகம் செய்யவும் தயாராக வேண்டும்

## யு.எஸ் படைகளுக்கு புஷ் அறிவுரை



(வாஷிங்டன்)

ஈராக் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும்அமெரிக்கப்படைகள் உயிர்த்தியாகம் செய்யவும் தயாராகவிருக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

ஈராக்கில் கடந்த சிலவாரங்களாக அமெரிக்க வீரர்கள் சதாமின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு வருகின்றனர் இதனால் பல அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இது குறித்து அமெரிக்க நாடாளுமன்றத்தில் கேள்வி எழுந்துள்ள நிலையிலேயே புஷ் தனது வராந்த வானொலி உரையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த உரையின் போது அவர் மேலும் கூறியதாவது,

ஈராக்கை பாதுகாப்பு மிக்க நாடாக மாற்றுவது அந்த நாட்டு மக்களுக்கும் அமெரிக்கக் கூட்டுப்படையினருக்கும் உள்ள பொறுப்பாகும்.

சதாமின் ஆட்சியின்போது அவருக்கு விசுவாசமாக இருந்துவந்தவர்கள் தற்போதும் அவருக்கு விசுவாசமாகவே இருந்து வருகின்றனர்.

இவர்களே பயங்கர வாதிகளுடன் சேர்ந்து அமெரிக்க வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

எனவே அமெரிக்கப்படைகளுக்கு ஆபத்து தொடர்ந்த வண்ணமே உள்ளன என்றார். (பி-2)

# புனித நகர் மக்காவில் 4 பெண் பயங்கரவாதிகள் கைது

(ரியாத்)

அல்கெய்டா பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த 4 பெண்களை சவுதிப் பொலிஸார் நேற்று முந்தினம் கைது செய்துள்ளனர்.

சவுதியின் புனித நகரான மக்காவில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த இந்த 4பெண்களும் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொண்டதையடுத்து அவர்களது வீட்டினைச் சோதனையிட்ட பொலிஸார் அங்கிருந்து பல ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் அவர்களையும் கைது செய்துள்ளனர்.

இந்த 4பெண்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (பி-2)

# உளவு பார்த்ததாக இத்தாலிய ஜோடி பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அணுசக்தி மையத்தின் முக்கிய ஆவணங்களை வைத்திருந்தாக இத்தாலியைச் சேர்ந்த ஜோடியை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர். தேரா காஜிகான் என்ற இடத்தில் கடந்த வியாழக்கிழமை இராணுவப் புலனாய்வு பொலிஸாரால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து தேரா காஜிகான் நகரில் வெளிநாட்டவர் நுழைவதற்கு பஞ்சாப் மாகாண உள்துறை தடைவித்துள்ளது. அந்த நகரில் உள்ள ஹோட்டல்களில் தங்க வெளிநாட்டவரை அனுமதிக்கக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (பி)

உலக தரிசனம்

# மைக்டைசன் கைதாகி விடுதலை

(வாஷிங்டன்)

முன்னாள் உலக அபார குத்துச் சண்டை சாம்பியனான "மைக் டைசன்" பொலிஸாரினால் நியூர் யோக் நகரில் வைத்து கைது செய்யப்பட்டார். உணவு விடுதியில் ஏற்பட்ட தகறாறு காரணமாக அவர் கைது செய்யப்பட்டதாகவும், சில மணி நேரத்தின் பின்னர் அவர் பிணையில் விடுதலை செய்யப்படார் எனவும் ரொயிட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஒரு மாதத்தின் பின்னர் அவர் மீண்டும் பொலிஸில் ஆஜராக வேண்டும் என பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மைக்டைசன் 1991ம் ஆண்டு பாலியல் குற்றச்செயல் காரணமாக 3வருடம் சிறையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-68)



24ஆண்டுகளுக்குப் பின் நேற்றைய தினம் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சீனாவிற்கு 6நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இவர் 1979ஆம் ஆண்டு வெளியுறவு அமைச்சராக சீனாவிற்கு விஜயம் செய்திருந்த போது அங்கு விமான நிலையத்தில் சீன அதிகாரிகள் வரவேற்பதையே இங்கு காண்கிறீர்கள்.

# காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் 6பேர் தூக்கிலிட்டு கொலை

## ஆந்திரா மாநிலத்தில் சம்பவம்

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் 6ஆதரவாளர்கள் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பொடாதளம் என்னம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

20பேர் அடங்கிய கொலைக்கும்பலொன்று சம்பவதினம் இக்கிராமத்திற்குள் நுழைந்ததாகவும் அங்குள்ள வீடுகளிலிருந்த காங்கிரஸ் தொண்டர்களை அக்கும்பல் வெளியே இழுத்து வந்து தாக்கிவிட்டு அவர்களைத்தூக்கிலிட்டுச் சென்றதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொலையில் ஈடுபட்ட கும்பல் தாங்கள் தெலுங்கு தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிவிட்டுச் சென்றுள்ளனராம்.(பி-2)

## இன்று ஒரு தகவல்

# ஆறுவது சினம்

எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர். அவருக்கு ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு! அதேநேரத்தில் அவருக்கு அரசாங்கத்தில் பொறுப்பான உத்தியோகம். இரண்டு பக்கமும் குறை இல்லாத அளவுக்கு கவனித்துக்கொண்டிருந்தார். எல்லாவற்றிலும் அவர் மிகவும் கெட்டிக்காரர். அவரால் முடியாத காரியம் என்று ஒன்று உண்டு என்றால்... அது பேசாமல் இருப்பது தான்! ஆமாம்! அவருக்கு எப்பொழுதும் எதைப்பற்றியாவது யாரிடமாவது பேசிக்கொண்டே இருக்கவேண்டும். மௌனமாக இருப்பது அவரைப்பொறுத்தவரைக்கும் மிகவும் கஷ்டமான காரியம். அப்பேர்ப்பட்ட அவர் வாரத்துக்கு ஒரு நாள் மௌன விரதம் இருப்பார். அதுவும் அலுவலகத்திலேயே! வழக்கமாக புதன்கிழமை அன்று அப்படி இருப்பார். வேலை செய்கின்ற பணியாளர்களிடம்பேசவே மாட்டார். ஆனால் அலுவலக வேலைகள் எல்லாம் ஒழுங்காக நடக்கும்.

ஏன் சார்! மௌமாக இருப்பது தான் உங்களுக்கு மிகவும் கஷ்டமாயிற்றே! அப்படி இருக்கும்பொழுது எதற்கு மௌன விரதம்? என்று அவரைப்பார்த்து ஒரு நாள் கேட்டேன். ‘‘ நமக்கு எது கடினமான செயலோ அதைச் செய்வது தான் பெருமை!’’ என்று அவர் பதில் சொன்னார். அவரின் கீழ் அந்த அலுவலகத்தில்வேலை செய்கின்ற இன்னொருவரையும் எனக்குத்தெரியும். அந்த ஆள் ‘‘ இதோ பாருங்கள்! எங்கள் அலுவலர் அவருக்கு கடினமான ஒரு காரியத்தை ஒவ்வொரு புதன்கிழமையும் செய்கிறார்! அதே மாதிரி எங்களுக்கு கடினமான ஒரு காரியத்தையும் அதே புதன்கிழமையன்று முடித்துக் கொள்கிறோம்’’ என்றார்.

‘‘அது என்ன?’’ என்று கேட்டேன். வேறு ஒன்றுமில்லைஅநேக பைல்களில் அன்றைக்குத்தான் அவரிடம் கையொப்பம் வாங்குவோம். சம்பளப்பட்டியல் உட்பட! வாய் பேசாமல் போட்டு விடுவார்! மற்ற நாட்களில் ஆயிரம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பார்! என்றார். இவரும் பெருமைப்பட்டுக்கொண்டார். ஏனென்றால் அவர் ஒரு கடினமான செயலை அன்று முடித்து விடுகிறார் அல்லவா!

ஒரு பையன் இருந்தான். ஒளிவு மறைவு இல்லாத சுபாவம் அவனுக்கு! அவனிடம் என்ன குறை என்றால் அவசரப்பட்டு சிந்திக்காமல் உணர்ச்சிவேகத்தில் எதையாவது செய்து விடுவான். ‘‘ பட்’’ என்று கோபம் வந்து விடும். ஒரு நாள் அரவிந்தர் அந்த பையனைப் பார்த்தார். ‘‘தம்பி !நீ மிகவும் பத்திசாலிதான்! அதிலே ஒன்றும் சந்தேகமே இல்லை. உன்னால் எல்லாம் முடியும். அந்த அளவுக்கு உன்னிடம் வலு இருக்கிறது. இருந்தாலும் நான் இப்பொழுது உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப்போகிறேன் ’’ என்றார். ‘‘கேளுங்கள் !’’ என்றான் பையன்.

உன்னை மாதிரிப் பலசாலியாக உள்ள பையனுக்கு கடினமான செயல் எது? அடிக்கு அடி கொடுப்பதா?அதாவது உன்னை ஒருவன் அவமதித்துவிட்டால் , உடனே அவன் முகத்தில் ஒரு குத்து விடுவது கடினமான செயலா ? அல்லது அந்த நேரத்தில் உன் கையைக் கெட்டியாக மூடிக்கொண்டு கால்சட்டைப்பைக்குள் வைத்துக்கொள்வது கடினமான செயலா? என்று கேட்டார் அரவிந்தர்.

என்னைப்பொறுத்தவரைக்கும் உடனே அவன் முகத்தில் குத்து விடுவது வெகு சுலபம். அந்த நேரத்தில் கையை மூடிக்கொண்டு சும்மா இருப்பது மிகவும் கஷ்டம் என்றான் பையன். ‘‘உன்னைப் போன்ற வீரமுள்ள பையனுக்கு எது பெருமை? சுலபமான காரியத்தைச் செய்வதா கடினமான காரியத்தைச் செய்வதா?’’ என்று கேட்டார் இவர். பையன் கொஞ்சம் தயங்கினான். யோசித்தான் . ‘‘கடினமான செயலைச் செய்வது தான் பெருமை!’’ என்றான்.

‘‘மிகவும் நல்லது! இன்னொரு சந்தர்ப்பம் வருகிறபொழுது நீ அது மாதிரி நடந்து கொள்!’’ என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். கொஞ்ச நாட்கள் கழித்துஒரு நாள் அந்தப்பையன் அரவிந்தரைத் தேடி வந்தான். நியாயமான பெருமையோடு அவர் முன் நின்றான். ‘‘என்னால் அதிக கடினமான செயலை செய்ய முடிந்தது’’ என்றான். ‘‘என்ன நடந்தது?’’ என்று விசாரித்தார். பையன் ‘‘ஐயா என்னுடன் வேலை செய்கின்ற பையன் ஒருவன் மிகவும் முன்கோபக்காரன் என்று பெயர் வாங்கியவன். அவன் கோபத்தில் என்னை அடித்துவிட்டான். உடனே நான் திருப்பிஅடித்து விடுவேன் என்றும் எதிர்பார்த்தான். அதற்கு தகுந்தமாதிரி எச்சரிக்கையாகவும் இருந்தான். அந்தச் சமயத்தில் எனக்கு நீங்கள் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது! அது நான் நினைத்ததை விடக் கடினமாகத்தான் இருந்தது. இருந்தாலும் நான் கையை கெட்டியாக மூடி கால்சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டேன். அப்படி செய்ததும் என்னுடைய கோபம் எல்லாம் போய்விட்டன! அவனுக்காக நான் கோபப்படவில்லை. வருத்தப்படஆரம்பித்தேன். கொஞ்ச நேரம் கழித்து அவனிடம் கை குலுக்குவதற்காக என்கையை நீட்டினேன் .அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய்விட்டது! அப்படியே என்னை கட்டிப்பிடித்துக் கொண்டான். அது மட்டுமில்லை... ‘‘இப்பொழுது நீ என்னை என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம். நான் என்றைக்குமே உன்னுடைய நண்பன்’’ என்றான்.

அப்படி என்று அந்த பையன் சொன்னதும் அரவிந்தருக்கு மிகவும் மகிழ்ச்சி! இந்தக்கதையை இன்று உங்களிடம் சொல்வதற்குமுன்னர், என் சிநேகிதன் ஒருவனிடம் சொன்னேன். அவன் கொஞ்சம் முன் கோபக்காரன். சொல்லி இரண்டு நாட்கள் கழித்து , அவனை சோதித்துப்பார்க்கவேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை! அதனால் முன்னால் போய் நின்று கொண்டு கோபம் வருவதுமாதிரிப் பேசினேன். என்ன ஆச்சரியம்? அவன் தன்னுடைய கால் சட்டைப்பையினுள் கையைக் கெட்டியாக மூடி வைத்துக்கொண்டு வெளியே எடுக்கவே இல்லை. கன்னா பின்னா என்று திட்டினேன். அப்போதும் கையை எடுக்கவில்லை.

சும்மாவாவது கன்னித்தில் ‘‘ பளார் ’’ என்று அறைந்து பார்த்தேன் அவன் அசைந்து கொடுக்கவில்லை. எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. மறு நாள் அவனைத்தேடி போய் என்னுடைய பாராட்டைத்தெரிவித்துக்கொண்டேன். அவன் என்னைப்பார்த்தவுடன் ‘‘அன்றைக்கு ஏதோ உன்னுடைய நல்ல காலம். நீ என்னிடம் அறை வாங்காமல் தப்பி விட்டாய்... இன்று வேண்டுமென்றால் அப்படிப் பண்ணிப் பாரேன்!’’ என்று சவால் விட்டான். ‘‘ என்னடா விஷயம்?’’ என்று கேட்டேன். ‘‘அன்றைக்கு லட்டுஒன்று கையில் வைத்துச்சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். நீ வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும் அப்படியே பாக்கெட்டில் மறைத்துக் கொண்டேன். அந்தச் சமயம் பார்த்து நீ அறைந்து விட்டாய்! அது தான் தப்பிக்கொண்டாய்’’ என்றான். சரி வருகிறேன் என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டு நான் வந்து விட்டேன்!

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

---

## யாழ். மாவட்டத்தில்

# நடமாடும் சேவைப் பிரிவை ஆரம்பிக்க விரைவில் நடவடிக்கை

## ஆட்பதிவு திணைக்களம் ஏற்பாடு

(காரைநகர்)

யாழ். மாவட்டத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பிரதேச செயலக ரீதியாக நடமாடும் சேவைகள் நடாத்தப்படவுள்ளது.

பிரதேச செயலகங்கள் மூலம் தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களைப் பெற்று துரிதகதியில் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே ஆட்பதிவுத் திணைக்களத்தினால் இந்நடமாடும் சேவை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் தேசிய அடையாள அட்டைகளைப் பெறவேண்டிய விண்ணப்பதாரிகளுக்கு கிராம சேவையாளர்களூடாக இவ்விடயத்தைத் தெளிவுபடுத்தி அதற்கான ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

தொலைந்த தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு பொலிஸ் முறைப்பாடு அவசியமானது. இப்பொலிஸ் பதிவினை சுலபமாகப் பெறுவதற்கு அதற்கான பதிவுப் புத்தகங்கள் யாழ். மாவட்டப் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் முறைப்பாடு பெறுவதில் ஏதாவது சிரமங்கள் இருந்தால்,அப்பகுதி பிரதேச செயலருக்கோ அல்லது மாவட்ட செயலக ஆட்பதிவுத் திணைக்களத்திற்கோ அறியத்தரும்படி கேட்கப்பட்டுள்ளது.

பிறப்புச்சான்றிதழ் இல்லாதவர்கள் அதற்கான தேடுதல் விளைவுடன் சத்தியக்கடதாசி அல்லது பாடசாலை விடுகைப் பத்திரம் அல்லது ஞானஸ்தான சான்றிதழ்,கடவுச்சீட்டின் பிரதி, பிரஜாவுரிமை சான்றிதழில் பிறந்த திகதி குறிப்பிடப்பட்டால் அதன் பிரதி என்பவற்றில் ஏதாவது ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பிரதேச செயலக ரீதியாக நடாத்தப்படும் நடமாடும் சேவைத் திகதிகள் பற்றிய விபரம் வெகு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-246)

---

# மேல் கொத்மலை திட்டத்தை எதிர்த்து

# இன்று எதிர்ப்புப் போராட்டம்

## புதிய ஜனநாயக கட்சி அழைப்பு

(கொழும்பு)

மேல் கொத்மலைத் திட்டத்தை முற்றாக ரத்துச்செய்து, எல்லா எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஒருமுகப்படுத்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒரே திசையில் முன்னெடுத்துச் செல்வோம். இன்று திங்கட்கிழமை தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் அடையாள வேலை நிறுத்தத்திலும் எல்லா எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சியின் மலையகப் பிரதேசக் கமிட்டியின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று திங்கட்கிழமை இடம் பெறும் அடையாள வேலைநிறுத்தத்திலும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடும்படி இ.தொ.கா. விடுத்திருக்கும் அழைப்புத் தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக இ.தொ.கா. விற்கு வெளியிலும் பலவிதமான அமைப்புகளும் தனிநபர்களும் தொடர்ச்சியாக பல எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடன் இணைந்து பொதுப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தவறிவிட்டது.

எனினும், இ.தொ.காவின் இவ்வாறான நடவடிக்கைகளினால் மக்களின் எதிர்ப்புப் போராட்டம் எவ்வகையிலும் பலவீனப்படுத்தக் கூடாது என்பதற்காகவும் மேல் கொத்மலைத் திட்டத்தை எப்படியும் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற பொது நோக்கத்தினாலும் எமது கட்சி இன்று திங்கட்கிழமை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும். தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் எவ் வித வேறுபாடுமின்றி அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டும். மலையகத் தமிழ் மக்கள் அனைவரும். இத் திட்டத்திற்கு எதிரானவர்கள் அனைவரும் சாத்தியமான எல்லா எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

---

## இராசி பலன்

**23. 06. 2003**

**(ஆனி 09, திங்கள்)**

நவமி ந.ப 12.18 வரை

ரேவதி ந.இ. 11.21 வரை

இராகு காலம்- 7.24-8.54

சுபநேரம்- 11.54-1.24

**மேடம்**
சோம்பல்நிலை, சயன சுகக்குறைவு, காரிய தாமதம், குடும்பக்கவலை.

**இடபம்**
மனமகிழ்ச்சி, விருந்துபசாரம், களஸ்திர நன்மை, காரியம் கைகூடும்.

**மிதுனம்**
நன்கொடை,பெரியோரால் மதிக்கப்படுதல், புதிய விடயம், முயற்சி கைகூடும்.

**கடகம்**
சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, தேசாந்திரவாசம், உத்தியோக பங்கம்.

**சிங்கம்**
அஜ ரணக்கோளாறு, வாகனபயம், போசனசுகம், பொருள் விரயம்.

**கன்னி**
மனோசௌக்கியம்,வருமானம் அதிகரிக்கும், இலட்சுமிகரம், காரியசித்தி.

**துலாம்**
பொருள் சேர்க்கை, சத்துருஜெயம், எடுத்த காரியம்கைகூடும், புதியதிட்டம்.

**விருச்சிகம்**
காரிய இடையூறு, அஜீரணரோகம், பெரியோர் வெறுப்பு , வியாபார விருத்தி.

**தனுசு**
மனச்சஞ்சலம், தனநாசம், எடுத்கருமங்கள் தாமதமாகும். மாதாசுகம்.

**மகரம்**
மனோ தைரியம், நற்கீர்த்தி, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை.

**கும்பம்**
அதிக செலவு, மனோசங்கடம், காரியம் தாமதமாகும், கௌரவக்குறைவு.

**மீனம்**
வெகுமானம், நல்லஅகாரம், பெண் சகோதரரால் நன்மை, முயற்சிபலிதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

---

# சிறுவர் துஷ்பிரயோகம் முக்கிய பிரமுகர்கள் கைது

(கொழும்பு)

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் மற்றும் அவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகத்தை மேற்கொள்பவர்கள் ஆகியோரை இனம் கண்டு அவர்ளைக் கைது செய்ய தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை துரித நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மனைவி உட்பட பௌத்த மதகுரு,சமூக சேவையாளர் எனக்கருதப்படும் வெளிநாட்டவர் என பிரபல நபர்கள் பலரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் ஒருங்கிணைக்கப் பட்ட பொலிஸ் குழுவினர் கைது செய்துள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது. (க-10)

---

# பிரதமர் ஹெலியில் இருந்தவாறே அதிகாரிகளுக்குப் பணிப்புரை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஹெலிகொப்டரில் இருந்தவாறே அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.


இச் சம்பவம் லங்கா ஹமவில் நேற்று முன்தினம்இடம் பெற்றுள்ளது. இது பற்றித் தெரியவருவதாவது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர்களும் பயணம் செய்த ஹெலிகொப்டர் சீரற்ற காலநிலை காரணமாக தரையிறங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஹெலிகொப்டரில் இருந்தவாறே பணிப்புரைகளை விடுக்க வேண்டிய நிர்ப்பதந்தம் ஏற்பட்டது.

லங்கா ஹமவில் உள்ள இரு அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் ஒரு பௌத்த விகாரை என்பனவற்றின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவைக் குழுவொன்று ஹெலிகொப்டரில் புறப்பட்டுச் சென்றவேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. (தி)

# வலம்புரி நடத்திய தரம் 9 மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி பரிசளிப்புவிழா காட்சிகள்

















இவ்விழாவில் உரைநிகழ்த்துபவர்கள் முறையே வலம்புரியின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.வெற்றிவேலாயுதம், நீர்வை மணி, துரையர், எஸ். பெருமாள், அதிபர் க.செல்வக்குமார் ஆகியோர் உரைநிகழ்த்துவதைக் காணலாம்.





பரிசு பெற்ற ஆண்களும், பெண்களும்



விழாவில் கலந்துகொண்டோர்







வலம்புரியின் நிர்வாகப் பணிப்பாளர் பரிசுவழங்கும் காட்சி

# பெண்கள் எழுச்சி தொடர்பில் விடுதலைப் புலிகள் விளக்கம்

(கிளிநொச்சி)

பெண்கள் எழுச்சி தொடர்பாக மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டு.அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறேமின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ்,மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் சிறப்புத் தளபதி நிலாவினி, மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் உட்பட 300 ற்கும் மேற்பட்ட பெண்கள் சமூக மேம்பாட்டு நிறுவனங்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பெண்கள் சமூக மேம்பாட்டு அமைப்பின் தொடப்பினை வலுப்படுத்தல்,தற்போதைய அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தல், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் ஆகிய நோக்கங்களை மையமாக வைத்து இக்கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளிடம் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்த கருணா அம்மான்,பெண்கள் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்கிக் கூறினார். (உ-8)

# மக்களின் மீள் குடியேற்றத்திற்கு பிரதமர் ரணிலே காரணகர்த்தா

## அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளில் அரைவாசிக்கு மேலானோர் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறியுள்ளனர். இதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசே காரணம் என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அகதிகளுக்கான சர்வதேச தினம் குறித்து கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றநிகழவொன்றில கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், கடந்த 20 வருடகால யுத்தம் காரணமாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றோரில் சுமார் ஒருலட்சத்துக்கும் அதிகமானோர் தற்போது நாடு திரும்பியுள்ளனர்.

ஏனையோர் அங்குள்ள இடம் பெயர்ந்தோருக்கான 100 அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் உலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்ற 8 லட்சம் மக்களில் 2 லட்சம் பேர் நாடு திரும்பியுள்ளனர். ஏனையோர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் இளைஞர்களின் நலன்புரி நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகிறது.

இதற்கென ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி,



நாட்டில் தற்போது சமாதானச் சூழ்நிலை நிலவுவதனாலேயே புலம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பூரண உதவி வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.(தி)

# பாடசாலைகளின் வேலை நேரத்தை அதிகரிப்பதனால் பயனுண்டா?

## கல்விப் பணிப்பாளர் நாயகம் கருத்து

(கொழும்பு)

பாடசாலைகள் இயங்கும் நேரத்தை ஆறு மணித்தியாலங்களிலிருந்து 8 மணித்தியாலங்களாக அதிகரிப்பதனால் சாதகமான விளைவுகளுடன் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும் என கல்விப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜி.பி.குணவர்த்தன தெரிவித்தார். பல நாடுகளில் இம்முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. எமது மாணவர்கள் மேலதிகமான புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உதவும். மாணவர்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்புகள் ஏற்படாத வகையில் இதனை அமுல்படுத்த முடியும் என்றால் இதன்மூலம் பயனுள்ள பெறுபேறுகள் கிடைக்கமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இது மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக இருக்கும். மாணவர்கள் 4 மணிவரை மதிய போசனம் உட்கொள்ளாமல் இருக்கமுடியுமா? அநேகமான பாடசாலைகளிலே சிற்றுண்டிச்சாலை வசதிகள் இல்லை. எவ்வாறாயினும் நடைமுறை ரீதியான சிக்கல்கள் தீர்க்கப்படமுடியுமாயின் இது ஒருகாலத்திற்கேற்றதும்,வெற்றிகரமான நடவடிக்கையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (பி)

## இலங்கையில் இருந்து வேலைதேடி

# லெபனான் சென்ற பெண்களின் தேகாரோக்கியம் பரிசோதனை

(கொழும்பு)

லெபனானில் வேலைபார்ப்பதற்காகச் சென்ற இலங்கைப் பணியாளாகளின் தேகஆரோக்கியத்தைச் சோதிக்கும் பணியில், தொழில்அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் லெபனான் நாட்டைச்சேர்ந்த 2வைத்திய நிபுணர்களும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லெபனானில் வேலைபார்த்து வரும் இலங்கையர்களின் சேமநலன்களை கவனிப்பதற்கென, அண்மையில் இலங்கை அந்நாட்டுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அமைச்சர் மகிந்த சமரசிங்க இப்பணியை மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை, லெபனானில் வேலைபார்க்கும் இலங்கையர்களிற்கு தொழிற் பயிற்சியளிப்பதன் பொருட்டு,அடுத்தமாதம் 5தொழில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப் படவுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (உ-10)

# புதிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன

## விபரங்கள் வர்த்தமானியில்

(யாழ்ப்பாணம்)

சுகாதார போஷனை நலனோம்பு அமைச்சினால், கல்விப்பொது தராதர உயர்தரப்பரீட்சையில் பெற்றுக் கொண்டமொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையின் படி பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மருந்தாளர், வைத்திய இரசாயனகூட தொழில் நுட்பவியலாளர், பௌதிக சிகிச்சையாளர், எக்ஸ் கதிராளகள்,தொழிற் சிகச்சையாளர்கள், கண்தொழில்நுட்ப வியலாளர்கள், புச்சியியல் உதவியாளர்கள், பல்தொழில நுட்பவியலாளர்கள், பாடசாலை பல சிகிச்சையாளர்கள், பொதுசன சுகாதார பரிசோதகர்கள், குடும்பசுகாதார சேவகிகள், பொது சன சுகாதார இரசாயனகூட வியலாளர்கள், மின்சார இதயத்துடிப்பு பதிவாளர்கள், மின்சார மூளைஇயக்கப் பதிவாளர்கள் ஆகிய பதவிகளுக்கே மேற்படி வண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 21.07.2003 ஆகும்.

இதுகுறித்த மேலதிக விபரங்களை இம்மாதம் 20திகதி வெளி வந்துள்ள வர்த்தமானியில் பாாவையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

# செய்தித்துளிகள்

## அலங்கார உற்சவம்

(மானிப்பாய்)

கல்வியங்காடு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 16ஆம் திகதி ஆரம்பமாகித்தொடர்ந்தும் பத்து நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவ நிகழ்வில் சைவப் புலவர் க. சத்தியதாசன் தெய்வீக சொற்பொழிவை ஆற்றிவருகிறார். (க-232)

## கபடிப போட்டியில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளில் கபடிப் போட்டிகளின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று வவுனியா மாநகர்சபை மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியிலேயே அப்பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனானது.

இதில் 2ஆம்,3ஆம் இடங்களை முறையே மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த களுதாவினை மகா வித்தியாலயம், வவுனியா மாவட்டத்தைச்சேர்ந்த வவுனியா சைவப் பிரகாச வித்தியாலயம் ஆகியன பெற்றுக் கொண்டன.

இதேவேளை,முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கிளி. சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-68)

## போக்குவரத்துக்கு தடை

(கல்வயல்)

கண்டிவீதி புனரமைக்கப்பட்டு வருவதனால் சாவகச்சேரி நவீன சந்தையை அண்டிய பகுதி போக்குவரத்துக்குத்தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் தற்போது சாவகச்சேரி நகர சபை வீதி போக்குவரத்துக்காகப பயன்படுத்தப்பட்டுவருகின்றது. (உ-36)

## கடவுச்சீட்டு விண்ணப்பம் பெறலாம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலகங்களுக்கு கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளதாகவும் தேவையானவர்கள் வந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் சம்பந்தப் பட்ட பிரதேச செயலக வட்டாரங்கள் தொிவித்துள்ளன. (உ-36)

## இடிந்தகட்டடத்தில் இயங்கும்தபாலகம்

(கல்வயல்)

கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிப்பிற்குள்ளான சாவகச்சேரி பிரதம தபாலகம் இன்று வரை புனரமைப்புச் செய்யப்படாத நிலையில், இடிந்த கட்டடத்தின் ஒரு பகுதியிலேயே மேற்படி தபாலகம் தெடர்ந்தும் இயங்கி வருகின்றது. (உ-36)

## சமாதான நீதவானாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கெயர் ஸ்தாபன திட்ட அமுலாக்கல் மாவட்ட கூட்டுறவுச்சபையின் வெளிக்கள உத்தியோகத்தராகவும்,கூட்டுறவு சமாசத்தின் கொழும்பு இணைப்பு உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய கனகரத்தினம் கணேசமூர்த்தி அண்மையில் கல்கிசை நீதவான் எச். என். ஜே. பெரேரா முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.(உ-15)

## மிதிவெடி அச்சம்

(கல்வயல்)

மட்டுவில் சோமஸ்கந்தா சன சமூக வீதிக்கருகில் மிதிவெடிகள் இருக்கலாமென்ற அச்ச உணர்வு மக்களிடையே நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் கடந்த புதன் கிழமை இரவு 7.30 மணியளவில் மிதி வெடி ஒன்று வெடித்ததைத் தொடர்ந்தே இவ் அச்ச நிலை தோன்றியுள்ளது. (உ-36)

## விண்ணப்பப் படிவம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் மீள் குடியேற்ற அதிகார சபையினால் 1983 ஜுலை 24-ம் திகதியில் இருந்து பயங்கரவாத வன்செயல் மற்றும் விமானத் தாக்குதல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் உடமைகளுக்கும் நஷ்டஈடு வழங்குதற்கான விண்ணப்பப் படிவங்கள் தற்போது கிராம அலுவலர்களினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (க)

## போதைப் பொருள் எதிர்ப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் '' சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம்'' எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக் கிழமை பி.ப. 6 மணிக்கு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் சி. இராசலிங்கம் தலைமையில் கொக்குவில் தாவடி தெற்கு ஸ்ரீ காளி அம்பாள் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்,கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம். திருநாவுக்கரசு, முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், சுதேச வைத்தியர் ஆ. தியாகராசா, சம்மேளன ஆலோசகரும் பல்கலைக்கழக மாணவருமான ஆ. சிவகுமார்,தீவக போருட உத்தியோகத்தர் ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-15,232)

## களனி பல்கலை மாணவர்கள் மோதல்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு மாணவ குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தினால் பல மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட மேற்படி மோதல் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 3பேர் கிரிபத் கொட வைத்தியசாலையிலும் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இம் மோதலிற்கான காரணம் எதுவும் இது வரையில் வெளியிடப்படவில்லை. (க-10)

## கசூரினா பீச்சில் கலாசார சீரழிவு!

(காரைநகர்)

காரைநகர் கசூரினா பீச்சில் கலாசார சீரழி நிகழ்வுகள் அதிகாரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவத்துள்ளனர். கலாசார சீரழிவுகளை தடுக்கும் இளைஞர்களின் நடமாட்டம் இல்லாத சமயங்களிலே கூடுதலாக இச் சீரழிவுகள் இடம் பெற்று வருகின்றன.

சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் உல்லாச பயணிகள் என்ற போர்வையில் வரும் இவர்கள் கூடுதலாகத் தனியார் கல்வி நிலைய மாணவர்களாகவே காணப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-246)

## ஒருவழிப்பாதையை பயன்படுத்துக

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, கே. கே. எஸ். வீதி ஆகியவற்றை ஒருவழி பாதையாக பயன்படுத்தாதவர்கள் மீது நீதி மன்றினூடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். போக்குவரவு கண்காணிப்பு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அண்மைக்காலமாக பலதடவைகள் எச்சரித்தும் மக்கள் அதனை செவிமடுக்காது அப்பாதைகளை இருவழிப்பயணத்திற்கும் பயன்படுத்துகின்றனர். இதனால் இவ்வீதியில் விபத்துக்கள் ஏற்படவாய்ப்பு இருக்கின்றது.

இனிமேலும் இதனை மீறுவோர் மீது கடும் சட்ட சடவடிக் கையை மேற்கொள்ளதாம் தயா ராகி வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (பி-4)

# வட்டார வழக்குச்சொற்களைத் தமிழகம் புரிந்துகொள்ள

# 'யாழ்ப்பாணத் தமிழ் அகராதி' தொகுக்கப்பட்டுள்ளது

அண்மையில் யாழ்ப்பாணத் திற்கு வருகைதந்த பன்மொழிப்புலவர் முனைவர் மு.சதாசிவம் அவர்கள் வலம்புரிக்கும் வருகைதந்திருந்தார். அவருடன் உரையாடல் நடத்த விரும்பியதன் பிரகாரம் அடுத்தநாள் காலை அவர் தங்கியிருந்த இந்து மத குருகுலத்திற்குச் சென்றேன். நிலையக் குருக்கள் ஐயா வரவேற் றுக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தார். சிறிது நேரத்தில் முனை



வர் சதாசிவம் அவர்கள் வணக்கம் கூறியபடி வந்தார். பதிலுக்கு நானும் வணக்கம் கூறினேன்.

தங்களது இளமைக் கல்வியைப் பற்றியும் அதனைத்தொடர்ந்து அக ராதிகள் அமைக்கும் ஆவல் எப்படி உருவானது என்பதைப் பற்றியும் கூறுவீர்களா? என்று கேட்டபொழுது அவர் தொடர்ந்தார்.

நான் சிறுவயதிலே திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தேன். அப் பொழுது நூல்கள் கிடைப்பது அரி தான விடயமாக இருந்தது. பாடத் திட்டத்திலே வந்த திருக்குறள், திருப் புகழ் போன்ற பாடல்கள் கைக்குக் கிடைத்தபோது அவற்றின் பொரு ளைத் தேடிக் கற்கின்ற பழக்கம் பத்தாவது வயதிலேயே எனக்கு ஏற் பட்டது. நான் அறிந்த பொருளை யெல்லாம் எழுதிவைக்கின்ற பழக் கங்கள் பிற்காலத்திலே அறிவாற் றலை வளர்க்கும் பழக்கமாக மாறி யது. சென்னையில் 1961ஆம் ஆண்டிலி ருந்து 1964ஆம் ஆண்டு வரையான நான்கு ஆண்டுகள் சைவசித்தாந்தக் கழகத்தில் பணிபுரிந்தேன்.

செந்தமிழ்ச் செல்விக்கு கட்டு ரைகள் எழுதியிருக்கின்றேன் அக் காலத்தில் பல்பொருள் ஆங்கிலத் தமிழ் அகரவரிசை என்ற நூலை உருவாக்க சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அந்த நூலை உருவாக்கித் தந்தேன். அதற்குப் பிறகு அகராதி எழுதுகின்ற பழக்கம் என்னைத் தூண்டிவிட்டது. அதனாலே அடுக்கு மொழி அகராதி என்ற அகராதியை 1965ல் நான் வெளியிட்டேன்.

நிகண்டுகளிலே பின் தெய்வப் பெயர் தொகுதியும் இருக்கின்றது. கடவுளுடைய பெயர்கள். ஆனால் இலக்கியத்திலே இன்னும் ஏராள மான பெயர்கள் காணப்படுகின்றன என்றறிந்து அவற்றை விரிவாக்கு வதற்கு நான் முயற்சி செய்தேன். எடுத்துக்காட்டாக விநாயகருக்கு 5000 பெயர்களையும் அதே போல திருமுருகனுக்கு 2000 பெயர்களை யும் பழனிமுருகனுக்கு ஆயிரம் பெயா களையும் உருவாக்கி அவற்றை விநாயகர் எழுச்சி என்றும், திருமுரு கன் எழுச்சி என்றும் பழனி எழுச்சி என்றும் பெயர் இட்டேன்.

அவற்றைப் பார்த்த சங்கராச்சாரியார் சுவாமி கள் எனக்கு அந்த நூல்களை அச்சிடுவதற்கு உதவிசெய்தார். அதிலிருந்து எனக்கு இந்த அகரா திப்பணியில் மேலும் ஊக்கம் ஏற் பட்டது. வெவ்வேறு வகையான அகராதிகள் வெவ்வேறு மொழி களில் காணப்படுகின்றமையால் தமிழிலும் அதிகமான அகராதி களை ஆக்கவேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. நான் தமிழில் நிறைய எழுச்சி மிக்கவன் என்பத னாலே எழுச்சிமிக்க அகராதி என்ற அகராதியை எழுதினேன். அதற்கு என்னுடைய ஆசிரியரான மீனாட்சி சுந்தரம் அவர்கள் அணிந்துரை செய்திருந்தார்கள். அதுபோல் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து சொற்களுக்கு 10 ஆயிரம் மரபுத்தொடர்கள் பிரயோகிக்கப் படுகின்றன.

**யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் வருகை தந்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த பன்மொழிப்புலவர் முனைவர் மு.சதாசிவம் அவர்களை வலம்புரி சார்பில் கவிஞர் துரையர் நேர்கண்டு உரையாடியபொழுது அவர் தெரிவித்த கருத்துக்கள் எமது வாசகர்களுக்காக இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஆ-ர்**

இங்கே இந்த அகராதி தமிழ்ச் சொற்களுக்கு பொருள் கூறுகிறது.

அதுபோலவே மனம் என்ற சொல் லுக்கு தமிழில் 12ஆயிரம் தொடர் கள் இருக்கின்றதாம். அவற்றையும் தொகுத்திருக்கின்றேன். இன்னும் அச்சிடப்படவில்லை. இதுபோல பல அகராதிகளை எழுதியிருக்கினறேன். ஏறக்குறைய 100 வகையான அக ராதிகளைத் தொகுத்திருக்கின் றேன். இவற்றைப்பார்த்து மேல்நாட் டினர் 1983ஆம் ஆண்டு மெக்சிகோ பல்கலைக்கழகத்திலே நடந்த உலக அகராதி மாநாட்டிலே உலகிலேயே அதிகமான அகராதியை எழுதியவர் என்ற பாராட்டை எனக்களித்தனர். நான் எழுதிய சிறப்பு அகராதிதான் பிற்காலத்தில் பல நூல்களுக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாக வும் விளங்கும் என்று பல அறிஞர் கள் கூறியுள்ளனர். அண்மையில் ஓர் அமெரிக்க அறிஞர் 'சொல்லும் பொருளும்' என்ற என் அகராதி யைப பற்றி பல அறிஞர்கள் கூறிய வற்றை எடுத்துக்காட்டி விமர்சனம் செய்தார். இவ்வாறு உலகம் முழுதும் எனது அகராதியைப்பற்றி பெருமை பரவியுள்ளது என்றார்.

தங்களது பிறமொழி விருத்தி கள் பற்றி சிறிது கூறுவீர்களா என்றபோது, நான் அண்ணாமலைப பல்கலைக்கழகத்திலே சிறந்த தமிழ்நூல்களைக்கற்றுக்கொண்டேன். இளவயதிலேயே வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைக் கற்றுக் கொண்டேன். இவற்றையெல்லாம் விட துருக்கி, மராட்டி ஆகிய மொழி களை எழுதிவைத்துப் படித்தேன். ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற் றேன். இதனால் ஆங்கில நாவல் ஒன்றினை தமிழில் மொழிபெயர்த் தேன். அந்த நாவல் எனக்குப் பெரும் புகழ்ஈட்டித்தந்தது. அந்த நாவலை மொழிபெயர்த்ததன் ஊடாக எனது பெயரை எல்லோரும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனைவிட பிரெஞ்சுமொழியில் இருந்தும் நாவல் களை மொழிபெயர்க்க வேண்டு மென்று எனது ஆசிரியர் கேட்டுக் கொண்டார். அதன்படியும் மொழி பெயர்த்தேன். பிறமொழிக் கவிதை களையும் தமிழில் மொழிபெயர்த் தேன் என்றார்.

முனைவர் மு.சதாசிவம் அவர் கள் அப்படிக் கூறியபொழுது, எனது மனதில் அரித்துக்கொண் டிருந்த கேள்வியைக் கேட்டேன். அதாவது கி.வா.ஜெகநாதன் அவர் கள் இங்கு வந்தபொழுது 'ஈழத்து சிறுகதைகளுக்கு அடிக்குறிப்பு போட வேண்டுமென்று குறிப்பிட் டாரே' அதுபற்றி உங்கள்கருத்தை அறியவிரும்புகிறேன் என்றேன்.

இந்தியத்தமிழில் இலங்கை மக்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்கு திரைப்படம் வாயிலாக வும் கதைகள், நூல்கள் வாயிலாக வும் நிறையப் பரிச்சயம் ஏற்பட்டி ருக்கின்றது. இதனால் தமிழகச் சொற்களை அவர்கள் ஓரளவு புரிந்து கொள்ளமுடியும். ஆனால் யாழ்ப் பாணத்து மொழி எங்களுக்குக் கிடைககவில்லை. யாழ்ப்பாணத்து மக்களுடைய வணிகத்தொடர்போ அல்லது வேறு தொடர்புகளோ எமக்கு மிகுதியாக ஏற்படவில்லை. 30ஆண்டு கள் அவர்களைச் சந்திக்கமுடியாத அரசியல்நிலை ஏற்பட்டிருந்தது. அதனால் யாழ்ப்பாண வட்டார வழக் குச்சொற்களைப் புரிந்துகொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டிருக் கின்றது.

எடுதது்க்காட்டாக 'சம்பல்' என்பது எங்களுக்குத் தெரியாது. சம்பல் என்றால் விலைமலிவு என்று தான் நாங்கள் பொருள் கொள்ளுவோம். துணியின் விலை இன்று சம்பல்என் றால் துணி நல்ல மலிவு என்று பொருள. அதேபோல நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சொற்களுக்கு எமக்குப் பொருள் தெரியாது.

இரண்டுபேர் கலந்துரையாடும் போது அந்தச்சொற்கள் எங்களுக் குப் பழக்கமாகி விடுகின்றன. அப் படி அடிக்கடி கதைக்கும்போது தெளிவாக உணர்ந்துகொள்ள முடி யும். இல்லாவிட்டால் தப்பாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்புள்ளது என்பதனால்தான் கலைமகள் ஆசிரிய அமரர் கி.வ.ஜெ.அவர்கள் அடிக்குறிப்பு தந்தால் நன்றாகயி ருக்கும் என்றார். அப்போது எஸ்பொன் னுத்துரை போன்ற யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர்கள் பலர் கடுமையான கண்டனத்தை கி.வா.ஜெகநாதன் அவர்களுக்கு தெரிவித்தார்கள். உங்களது நாட்டிலே நெல்லைத் தமிழ், சென்னைத்தமிழ், கொங்கு தமிழ் போன்ற தமிழ்கள் இருக்கின் றன இவற்றையெல்லாம் வைத் துக்கொண்டா பரீட்சிக்கின்றீர்கள்? அந்தளவிற்கு எமது யாழ்ப்பாணத் தமிழ் இளக்காரமாகப் போய்விட் டதா? என்று தவறாகப்புரிந்து கொண்டு கண்டனம் தெரிவித்திருந் தார்கள்.

உண்மையிலேயே யாழ்ப்பாணத் தமிழ் மிகவும் உயர்ந்த தமிழ. புதிய புதிய சொற்களையும் கருத்துக் களையும் வளர்த்துக்கொண்ட ஒரு தனிமொழிபோல தமிழிலே சிறந்த வட்டார வழக்காக இருந்தாலும், தமிழ்மொழியோடு வளர்ந்தவர் களுக்கு மிகவும் தமிழறிவு வளர்ந் திருக்கும். அதனாலேயே பல சொற் கள் எமக்குப் புரியவில்லை. புரி யாத சொற்களுக்கு பொருள் கொடுத் தால் நன்றாக இருக்கும்.

புற நானூற்றுப் பாடல்களில் அருஞ்சொற்பொருள் கூறியிருக் கின்றார்கள். அதுபோல வட்டார வழக்குச்சொற்களுக்கும் அருஞ் சொற் பொருள் கூறினால் நன்றாக இருக்கும். உங்களது யாழ்ப்பாணத் தமிழை இவ்வளவு குறைவாக மதிப்பதாக எண்ணவேண்டாம். இந் தத் தமிழ் வளர்ந்தோங்கிய சிறந்த தமிழாகவே இருப்பதனாலேயே தொடர்புகள் அற்றுப்போய் விட்ட தனால் எமக்குப் பல சொற்கள் புரியவில்லை. அதனால்தான் யாழ்ப் பாணத் தமிழ் அகராதியைத் தொகுத் தேன். அதிலே பதினைந்தாயிரம் சொற்கள் தமிழகத் தமிழுக்கும் யாழ்ப்பாணத் தமிழுக்கும் சொல் லிலும் பொருளிலும் வேறுபாடான சொற்கள் உள்ளன. இவற்றை தொகுத்து 400 பக்கத்தில் இந்த அக ராதி வெளிவரவிருக்கின்றது.

நான் இலங்கைத் தமிழ் அகராதி என்ற பெயரில் எல்லா வட்டார வழக்குகளையும் தொகுக்க வேண்டு மென்றே எண்ணினேன். ஆனால் யாழ்ப்பாணத் தமிழுக்கு ஒரு தனித் துவம் இருப்பதனாலே அதை முத லில் தொகுக்க உள்ளேன். இங்கு மலையகத் தமிழ், இஸ்லாமியத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ் நான்கு வகையான வட்டார வழக்குகளை யும் சோத்து இலங்கைத்தமிழ அகராதி என்ற பெயரில் வெளியிடவிருக் கிறேன்.

நான் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் திருக்குறள் பற்றி 6 ஆராய்ச்சி செய்தேன். இரண்டு தங்கப் பதங்கங்களைப் பெற்றேன். அதனால் திருக்குறள்மீது ஓர் தனிப் பற்று ஏற்பட்டது.

**உடன் உரையாடியவர்**
**கவிஞர் துரையர்**

மேற்படிப்புக்கழகத்தில் பணிபுரி யும்போது அவர்கள் திருக்குறளில் பல அகராதி, பல் நூல்களை எழுதி யிருக்கிறார்கள். மு.வ. அவர்களு டைய தெளிவுரை பல லட்சம் விற் பனையாகி இருக்கின்றன. திருக் குறள் உலகின் எந்த மொழியில் இருந்தாலும அவற்றின பொருளை நான தேடிக்கற்றிருக்கின்றேன். அது மட்டுமன்றி வடமொழியில் உள்ள அர்த்த சாஸ்திரம், வான சாஸ்திரம் போன்ற ஏராளமான நூல்களிலும் உள்ள பொருளைத் தேடிக்கற்றிருக் கின்றேன். திருக்குறள்பற்றி 500 பழமொழிகள் உள்ளன. திருக்குற ளுக்கு இதுவரை மூன்று அறிஞர் கள் உரை எழுதியுள்ளனர். இன் னும் பலரும் எழுதவுள்ளனர். திருக்குறள் பற்றி ஆயிரம் நூல்களில் செய்திகள் வந்துள்ளன. அவற்றை யும் தொகுத்து எழுதுவேன். திருக் குறள் பற்றி ஒவ்வொரு அறிஞரும் கூறிய கருத்துகளையும், விவாதங் களையும் தொகுத்து விரிவான நூலாக வெளியிடவுள்ளேன்.

பல மொழிகளை நான் படித்த தனால் தமிழ் கவிஞர்மன்றம் எனக்குப் பன்மொழிப் புலவர் என்ற பட்டத்தை வழங்கியது. நான் உலக அகராதி மாநாட்டில் கலந்து கொண்ட போது இங்கிலாந்தில் உலகி லேயே அதிகமான அகராதிகள் எழுதியதால் வாய்மொழி மூலமான பாராட்டுக்கள் வழங்கினார்கள். விரு தாகத் தரவில்லை. ஆனால் கேம்பிரிச சில் உள்ள உலக அறிஞர் வரலாற றுக்கழகம் 21ஆம் நூற்றாண்டின் சாதனையாளர் என்ற பட்டத்தை வழங் கியது. கடந்த ஓராண்டின் சாதனை யாளர் என்ற பட்டத்தையும் வழங்கி யது. ஏனையவையெல்லாம் வாய் மொழிமூலமான பாராட்டுக்கள்.

1979இல் உலக தமிழ்மாநாடு நடக்கின்றபோது யாழ்ப்பாணம் வர வேண்டுமென்று நான் ஆசைப் பட்டேன். ஆனால் அந்த எண்ணம் கைகூடவில்லை. அதற்குப்பிறகு யாழ்.செல்லவேண்டும் ஆறுமுக நாவலர் பிறந்த மண்ணை வணங்க வேண்டும் என்று கடந்த 24 ஆண்டு கள் தவம்புரிந்தேன். கொழும்பில் நடந்த இந்துமாநாட்டிற்கு வந்த போது அமைச்சர் மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் நடக்கும் இந்து மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று அழைத்துவந்து அறிஞர்கள்மத்தியில் சொற்பொழி வாற்றும் வாய்ப்பைத்தந்தார். பல இடங்களிலும் பேசியுள்ளேன். யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த கூட்டத்திலே யாழ்ப்பாணத் தமிழ் அகராதி பற்றிக் கூறினேன். இங்கு பலரையும் கண்டு உரையாடும் வாய்ப்புக்கிடைத்தபோதுதான் இங் குள்ள மக்கள் எவ்வளவு சிறந்த வர்கள், விருந்தோம்பும் பண்புமிக் கவர்கள், அன்புமிக்கவர்கள் என்

**பன்மொழிப்புலவர்**
**முனைவர் மு.சதாசிவம்**

பதை உணர்ந்தேன். தாய்மொழியை தமிழாகக்கொண்ட ஒற்றுமையால், இயல்பான பாசம் ஏற்பட்டதோ என எண்ணுகிறேன். இங்குள்ள போரின் நிழல்களாக கோயில் கட்டட இடிபாடு கள் மீண்டும் பழையபொலிவு பெற்று விளங்கவேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழ் மிகவும் தூயதமிழ். உதாரணமாக வலம்புரி என்ற சொல்லை எடுத்துக்கொள் வோமானால் மிகவும் தூய தமிழ்ப் பெயர் கொண்ட பத்திரிகை. நான் மிகவும் வலம்புரியை படித்து மகிழ்ந் தேன். வெளிவரும் நூல்கள் யாவும் சிறந்த தமிளில் வெளிவருகின்றன. மக்கள் தமிழன்புமிகுந்து விளங்கு கின்றார்கள். எந்தஇடத்தில் சென்று வாழ்ந்தாலும் தமிழ்மொழிக்கே மிக்க முக்கியத்துவம் கொடுக்கின்றார் கள். ஈழத்தமிழை இந்தியமக்கள் அறியவேண்டும் என்பதற்காகத் தான் யாழ்ப்பாணத் தமிழ் அகரா தியை எழுதினேன். இதன்மூலம் தமிழகத்தினருக்கும் இலங்கை மக் களுக்கும் ஓர் இணக்கப்பாடு வர வேண்டும் என்று விரும்புகின்றேன்.

வலம்புரி இலக்கிய மணம் கமழும் நாளிதழ். செய்திகள் மட்டு மல்லாமல் செய்தியைக் கொடுக் கின்றபோது இலக்கிய மணமும், நயமும் மிகுந்து காணப்படும் நாளி தழ் கட்டமைப்பு மிக அழகாக இருக் கின்றது. வலம்புரி என்ற பெயரே மிக அழகானது. வலம்புரி முத்து பல்லாயிரம் இடம்புரி முத்துக்களில் ஒன்று இப்படிப்பட்ட சிறந்ததொரு பெயர்கொண்ட இந்தப்பத்திரிகை மிகுந்த இலக்கியப் பணி புரிவதை நானறிந்தேன். இதன் வாசகர்கள் மிகவும் கொடுத்துவைத்தவர்கள். தமிழ்நாட்டுககும் வலம்புரி வரவேண்டு மென்பது எனது விருப்பம். அதற்குரிய வாய்ப்பை நீங்கள் உருவாக்கி னால் நாம் பெருமைப்படுவோம் என்றார்.

எமது உரையாடல் நிறைவுற் றதும், புலவர் கந்தசாமி அவர்கள் முனைவர் மு.சதாசிவம் அவர்களைச் சந்திப்பதற்காக உள்ளே வந்தார்.□

## நலன்புரி நடவடிக்கைகளில்

## கைதிகளை ஈடுபடுத்தத் திட்டம்

(கொழும்பு)

நீதிமன்றங்களினால் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை நலன் புரிப் பணிகளில் ஈடுபடுத்தும் விஷேட திட்டம்ஒன்றை அமுல்படுத்தி வரும் நீதி, மறுசீரமைப்பு தேசிய ஒருங் கிணைப்பு அமைச்சு இதனை விரை வில ஏனைய மாவட்டங்களுககும் விஸ்தரிக்கவுள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு மேல் நீதிமன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம், படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப் படவுள்ளது.

இத்தட்டத்திற்கு அவுஸ்திரேலிய அரசு 40 மில்லியன் ரூபாவை நிதி யுதவியாக வழங்கியுள்ளது.

இதேவேளை, இத்திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் அமுல்படுத்துவதன் மூலம் கைதி களை நல்வழிப்படுத்தவும் 90 வீத மான செலவுகளைக் குறைக்கக் கூடியதாகவும் இருக்கு மென நீதி யமைச்சு தெரிவித் துள்ளது.

இத்திட்டத்தின் பிரகாரம், சுத்தி கரிப்புப் பணிகள், திருத்தவேலை கள் போன்றவற்றில் கைதிகளை ஈடு படுத்த உள்ளதாகவும் நீதி யமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(உ-10)

## கடற்படையின் புதிய நடைமுறையால்

## கரைவலைத் தொழிலாளர் பாதிப்பு

(தும்பளை)

கற்கோவளம் கடற்பகுதியில் கரைவலைக்காக படகுகளில் செல் பவர்களும் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும் என்ற புதிய நடைமுறை யினை கடற்படையினர் தற்போது அமுல்படுத்தியுள்ளனர்.

ஏற்கனவே கட்டுமரம், இயந் திரப்படகு என்பவற்றில் சென்று தொழில்செய்வதற்கு மாத்திரமே முன்னர் அனுமதிப்பத்திரமுறை நடை முறையில் இருந்து வந்தது. ஆனால் 200மீற்றர் கடற்பிரதேசத் திற்குள் கரைவலைத் தொழில் செய்வதற்கு எந்தவொரு நிபந்தனையும் இருக்கவில்லை. தற்போது கரைவலைமீன் பிடியாளர் களையும் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும்என இராணுவம் நிர்ப் பந்தித்து வருகிறது. வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவில் கற்கோவளம் பகுதியில் மட்டுமே கரைவலைத்தொழில் மேற் கொள் ளப்பட்டு வருகிறது. தொண்டை மானாறு தொடக்கம் தும்பளை கிழக்குவரையான கடற் பகுதியில் முருகைக்கற்பாறைகள் காணப் படுவதால் அங்கு தொழில் செய்ய முடியாது உள்ளதாகவும் கடற் றொழிலாளர் விசனம் தெரிவித் துள்ளனர்.

(உ-24)

## சிறு விளம்பரம்

### தவறவிடாதீர்கள்!

எல்லா இராசிகளுக்கும் ஒரே புத்தகத்தில் பலாபலன்கள். சனீஸ் வர, வியாழ, இராகு - கேது மாற்றம் உங்க ளுக்கு எப்படி? மற்றும் தர உள்ளீட்டிலும் வாங்கக்கூடிய 'அழகியல்' (தரம்1 தொடக்கம்5வரை-புதிய பாடத்திட்டப்பாடல்கள் - அழகிய சித்திரங்கள் பாடல்களை மெருகூட்டுகின்றன) ஆனந்தி வெளியீடுகள் - சோதிடர் V.A' சிவராசா வெளியிட்டது என்று கேளுங்கள். எங்கும் விற்பனையாகின்றது. சோதிட ஆலோசனைகளுக்கு 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(7189)


### கண்டெடுக்கப்பட்டுள்ளது

அண்மையில் மருதனார்மடச் சந்திக்கு அண்மித்த பகுதியில் கையிலணியும் நகையொன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். 21.05.2003 இல் கண்டெடுக்கப்பட்டது.

# அரசு - புலிகள் இடையிலான சமாதான பேச்சுக்கள் மீண்டும் உத்வேகமடையும்

## நம்பிக்கையுடன் அரசு காத்திருக்கிறது என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் தற்போது சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ள போதிலும் இத்தடங்கல்கள் விரைவில் நீங்கி, விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வார்கள் என்ற தளராத நம்பிக்கை அரசிற்கு இருக்கிறது என அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சீனன் குடாவில் இலங்கை - ஜப்பான் நிறுவனங்களின் கூட்டு இணைப்பில் இயங்கும் டோக்கியோ சீமெந்து ஆலையில் 750 மில்லியன் ரூபா செலவிலான நவீன இயந்திரத் தொகுதியினை ஆரம்பித்து வைக்கும் வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல் செய்வதில் விடுதலைப் புலிகளின் கருத்துக்களையும் அரசு கேட்டறிய இருக்கிறது.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாது விட்டாலும், வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தியில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள்.

அதேவேளை, மீண்டும் வன்செயல்களில் இறங்குவதில்லை என



தமிழீழ விடுதலைப் புலிகள் அரசுக்கு அளித்த வாக்குறுதிகளை அவர்கள் தொடர்ந்தும் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. மீண்டும் போர் ஏற்படும் என்ற அச்சம் தற்போது நீங்கியுள்ளது. மக்கள் அமைதியான ஓர் சூழலில் வாழ்ந்துகொண்டிருப்பதையே நாம் காண்கின்றோம்.

இவ்அமைதி தொடர்ந்தும் நிலவி, அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழுவதற்கும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை உருவாக்கிக் கொள்ளவும் அரசு தற்போது தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே அரசு - தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவாத்தையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

(உ-10,3)

# பொங்குதமிழ் நிகழ்வுக்கு மக்களை தயார் செய்யும் முயற்சியில் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு குடாநாட்டு மக்களை தயார் செய்யும் முயற்சியில் மாணவர் குழுக்கள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பிரசார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக, இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்"

என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் தொடர்பான கலந்துரையாடல்களுக்காக கடந்த சில தினங்களாக சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளனா. அத்துடன் பொங்குதமிழ் எழுச்சியின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வீதி நாடகங்களும் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

வன்முறைகள் எதுவுமின்றி மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக இப்பொங்குதமிழ் நிகழ்வு தினத்தன்று காலையில் பாடசாலை மட்டத்தில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகளை நடாத்தப்படுவதுடன் அதில் அதிபர்கள், ஆசிரியர்களது உரைமற்றும் மாணவர்களது கவிதைகள், பாடல்கள், பேச்சுக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னதாக பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் மாவிலைத் தோரணம், வாழை என்பவற்றைக் கொண்டு அலங்கரிப்பது எனவும், வீதிகளில் பனர்கள் கட்டுதல் போன்ற விடயங்கள் நேற்றும் நேற்று முன்தினமும் தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், யாழ்ப்பாணம், மருதனார் மடம் பகுதிகளில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள்,மாணவர்களுககான விசேட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுவரும் பொங்குதமிழ் இறுதி நிகழ்விற்காக மக்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், நிகழ்வு நடைபெறும் இடத்தில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் நிறுத்துவதறகான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்களின் வசதி கருதி இம்முறை பல்கலைக்கழக மைதானத்தினுள்ளேயே தண்ணீர் வசதிகள்,குளிர்பான வசதிகள்,சிற்றுண்டி வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. (பி)


# மக்கள் வங்கி

## அறிவித்தல்

மக்கள் வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், சுன்னாகம் கிளையிலும் 31.12.1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில்

பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை | 19.07.2003 இலிருந்து - 22.07.2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| சுன்னாகம் கிளை | 26.07.2003 இலிருந்து - 29.07.2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |

மக்கள் வங்கி

யாழ். பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

(C/6297)


# உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஒத்திவைப்பு

## முஸ்லிம் கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டிருந்த உளளூராட்சி மன்றத் தேர்தல்களை மீண்டும் ஒத்திவைத்தமைக்கு முஸ்லிம் கட்சிகள் தமது பலத்த எதிர்ப்பினை தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதா? அல்லது ஒத்திவைப்பதா? என்று அரசு எதுவும் செய்யமுடியாத நிலைகளில்; உயர் நீதிமன்ற தீர்ப்பினை அடுத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பதாக அரசு அறிவித்திருந்தது. அரசின் இந்த அறிவிப்பை ஏற்கமுடியாததென முஸ்லிம் கட்சிகள் கூறியுள்ளன.

இந்நிலையில், தேர்தல்களை உடன் நடத்தவேண்டும் என்றும் அக்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை, உள்ளூராட்சி மனறத் தேர்தல்களுக்கென புதிதான வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்பதால் தமிழ்க் கட்சிகள் மத்தியில் மாறுபாடான கருத்துக்கள் நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்விதம் இருக்க, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ரவூப் ஹக்கீம் மற்றும் முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோரும காலம் தாழ்த்தாது உடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதை தமிழ்க் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

(ம)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்கள் 84 முகாம்களில் தங்கியுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தென்பகுதியில ஏற்பட்ட மண்சரிவு, வெள்ளப்பெருக்கு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3 வகையான உதவிகள் வழங்கப்படும் என சமூக சேவைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி விஜயலக்சுமி ஜெயராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன்கீழ், மண்சரிவினாலும், வெள்ள அனர்த்தங்களினாலும் வீடு வாசல்களை இழந்தவர்களுக்கு 20 பேர்ச் காணியும், 1லட்சம் ரூபா பணமும் வழங்கப்படவுள்ளது. பகுதியாக வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா பண்ம் வழங்கப்படவுள்ளது.

இவ்வனர்த்தங்களினால் மாத்தறையில் 54முகாம்களில் 3 ஆயிரத்து 597 பேரும், இரத்தினபுரியில் 30 அகதிமுகாம்களில் 2 ஆயிரத்து 455 பேரும் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

பூரணமாக வீடுகள், காணிகளை இழந்தவர்கள் 3 ஆயிரத்து 986 பேர் எனவும், வீடுகளை மாத்திரம் இழந்தவர்கள் 9 ஆயிரத்து 294 பேர் எனவும், வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளானவர்கள் 30 ஆயிரத்து 260 பேர் எனவும் புள்ளிவிபர அறிக்கைகள் கூறுகின்றன.

வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள் என்பவற்றால் தென்பகுதியில் உள்ள 5 மாவட்டங்களிலும் ஏற்பட்ட அனர்த்தங்களினால் 17 பேர் காணாமற் போயுள்ளதாகவும், 236 பேர் இறந்துள்ளதாகவும், 39 ஆயிரத்து 554 பேரின் வீடுகள் சேதமடைந்திருபபதாகவும், 1 லட்சத்து 38 ஆயிரத்து 973 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ-15)

*எற்றிற்குரியர் கயவ ரொன்று*
*உற்றக்கால்*
*விற்றற்கு உரியர் விரைந்து*
*– குறள்*

## வலம்புரி

### மாற்றம் தெரிகிறது!

விடுதலைப்புலிகள் பங்கு பற்றாத பேச்சுக்கள் எந்த விதமான பலனையும் தரப்போவது இல்லை. இஃது உலகறிந்த உண்மையாயினும் இந்த உண்மையை பொதுஜன ஐக்கிய முன்னணி பகிரங்கமாக அறிவித்திருப்பது அதிசயமான உண்மை.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றுவதை எதிர்த்த ஜே.வி.பியுடன் கூட்டுச் சேரவிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி இத்தகையதொரு அறிவிப்பை விடுத்திருப்பதை அதிசயம் என்று கூறின் அதில் ஆச்சரியம் இருக்க முடியாது.இது மட்டுமன்றி டோக்கியோ மாநாட்டில் பங்கு பற்ற மறுக்கும் விடுதலைப்புலிகளை மாநாட்டில் கலந்து கொள்ள வைப்பதில் சர்வதேச நாட்டுப் பிரதிநிதிகள் கடும் முயற்சி செய்வதை நான் விரும்பவில்லை இந்நடவடிக்கையை வெறுமனே பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது. இவ்வாறு கூறியவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே.

இவ்வாறு பல வழிகளிலும் விடுதலைப்புலிகளை எதிர்த்த பொதுஜன ஐக்கிய முன்னணி இப்போது திடீரென, விடுதலைப் புலிகள் பங்குபற்றாத பேச்சுக்கள் வெற்றியளிக்காது என அறிவித்ததில் கட்சியின் மன ஆதங்கம் தெரிகிறது.

அதாவது, தன்னால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சி தன்னாலேயே நிறைவேற வேண்டும் என்ற ஆசையும், தனது சமாதான முயற்சியை குழப்பிய ஐக்கிய தேசிய முன்னணி இப்போது விடுதலைப்புலிகளுடன் தான் பேச்சு நடத்திக் கொண்டு சர்வதேச ரீதியில் சமாதானத்தின் சிருஷ்டி கர்த்தராக தன்னைக் காட்டிக் கொள்ளும் பிரதமர் ரணில் மீதான ஆத்திரமும் ஒன்று சேர விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணி பேச்சு நடத்தினால் என்ன? என்ற ஆதங்கம் ஜனாதிபதியிடம் நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. இதன் வெளிப்பாடே விடுதலைப்புலிகள் பங்கு பற்றாத பேச்சுக்கள் வெற்றி தராது என்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் அறிவித்தல் ஆகும்.

விடுதலைப்புலிகளிடம் மீண்டும் சமாதானப்பேச்சுக்களை தொடர வேண்டும் என ஜனாதிபதி விருப்பம் கொண்டிருந்தாலும் அது விடயத்தில் விடுதலைப்புலிகள் இம்மியும் இசையவில்லை.

விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தன்னை சந்தித்த தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூறி, அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். எனினும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டைத் தெரிந்து கொண்ட கூட்டமைப்பினர் அந்த விடயத்தை ஜனாதிபதி மாளிகையுடன் விட்டு விட்டனர் இம்முயற்சியின் அடுத்த கட்டமாகவே அமைச்சர் மகேஸ்வரன் உடனான சந்திப்பின் போது விடுதலைப் புலிகளுடன பேசவிருக்கும் தனது விருப்பத்தை ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இவற்றின் தொடராகவே இப்போது புலிகள் இல்லாத பேச்சுக்கள் உப்பில்லாத பணடம் என்ற கதையை ஜனாதிபதியின் கட்சி விடுத்துள்ளது.

# பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு முஸ்லிம் மக்கள் முழு ஆதரவு

## அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது; உரிமைக்கு குரல் கொடுப்போம் என்கிறார் மௌலவி இர்பான்

(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் 27ம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு இன, மத பேதம் இன்றி முஸ்லிம் மக்களும் தம் முழு ஆதரவையும் வழங்குவார்கள் என மௌலவி ஏ.ஜீ.எம். இர்பான் தெரிவித்துள்ளார்.**

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் நேற்று நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு குறித்த முக்கிய கலந்துரையாடலிலேயே இர்பான் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது மீளக் குடியமர்வதில் உள்ள பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கும் உரியது.

எனவே மாணவர்களாக முன் வந்து மக்களின் இயல்பு வாழ்வுக்காக மேற்கொள்ளும் இவ் எழுச்சி நிகழ்வில் முஸ்லிம் சமூகமும் பங்கேற்கும்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவரும் மக்களுக்கும் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பும் மக்களுக்கும் இராணுவம் தொல்லைகளைக் கொடுத்தாலும் அதனை நாம் பொருட்படுத்தாது இந்நிகழ்வில் கலந்து கொண்டு எமது பங்களிப்பையும் செய்வோம்.

எம் எதிர்ப்புக்களையும் சகித்துக் கொண்டு இராணுவம் தன் ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் கண்ணும் கருத்துமாய் இருப்பது போல் நாமும் எதிர்ப்புக்களை பொருட்படுத்தாது எமது கடமைகளைச் செய்யத் தயாராவோம் என அவர் தெரிவித்தார்.

வண.பிதா பேர்ணாட் அடிகளார் இந்நிகழ்வில் கருத்துரையாற்றுகையில்:

புரிந்துணர்வு ஏற்பட்ட காலப்பகுதியில் அரசுக்கும் இராணுவத்தினருக்கும் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் இயல்பு வாழ்வு ஏற்பட வேண்டும் என்ற ஓர் எண்ணம் இருந்தது. ஆனால் அது தற்போது மறைந்தே விட்டது.

யுத்தநிறுத்தம் ஆரம்பமான காலப் பகுதியில் இவர்களிடையே தமிழர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு காணப்பட்டு வந்தது.

ஆனால் அது காலப்போக்கில் மாற்றமடைந்து, பின் படைத்தரப்பு தன் கெடுபிடிவேலைகளை மீண்டும் ஆரம்பித்துவிட்டது.

இத்தகைய மாற்றத்திற்கு இன்று மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொண்டு பெரிய பெரிய தலைமைப் பதவிகளில் இருப்பவர்களே காரணம். பொறுப்புணர்வற்ற இவர்கள் தமிழரின் தேவைகளை உணர்ந்து தம் கருத்துக்களை வெளியிடாது முரண்பாடான கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

இதேபோல் சமாதானப் பேச்சுவார்த்தை என்கின்ற விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் ஆளுக்காள் மாறுபட்ட கருத்துக்களை கூறி வெளிநாட்டையும் ஏனைய சமாதான தூண்டுதல் சக்திகளையும் திசை திருப்புவதில் ஈடுபடுகின்றனர்.

அனைத்துக்கும் மேலாக வெளிநாட்டு தீய சக்திகள் எம் நாட்டில் ஏற்படும் கலகங்களையும் சமாதானத்தையும் தம் இஷ்டப்படி இலாப நோக்கில் பயன்படுத்துகின்றன.

இவ்வாறான காரணங்களால் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு சீரழிகிறது. இதனை இனியும் தமிழர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இச் சீரழிவுகளை அரசு நிறுத்த வேண்டும் அல்லது நாமாகச் சென்று இயல்பு வாழ்வை ஏற்படுத்த வேண்டி வரும்.

நாம் எதிர்பார்க்கும் இயல்பு வாழ்வு திரும்புவதற்கு பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். முன்னைய அரசுகளால் இணக்கப்பாடு காணப்பட்ட வகையில் இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு வழங்கப்பட்டாலேயே எமக்கு நல்லதொரு அரசியல் தீர்வு கிட்டும்.

மாறாக இந்நிலை தொடருமானால் இராணுவ அகல்வுக்கு பதிலாக அவர்களின் நிலைகள் பலப்படுத்தப்பட்டு உறுதிப்படும். இதனால் தற்போதைய அசாதாரண நிலை என்றும் தொடரும். எம்மினம் தம் தனித்துவத்தை இழக்கும்.

இடைக்கால நிர்வாகம், இயல்பு வாழ்வு, சமாதானப் பேச்சுவார்த்தை ஆகியவற்றால் எமக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை இலக்காகக் கொண்டே நாம் அனைவரும் செயற்படுதல் அவசியம்.

இத்தகைய அவசியத்தை வலியுறுத்தும் ஓர் எழுச்சி நிகழ்வே எதிர்வரும் 27ம் திகதி நடைபெறவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வு அமைய வேண்டும் என்றார்.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடல்ல வண.பிதா ஜெயக்குமார அடிகளார், பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், வணிகர் மன்ற தலைவர் ஜெயசேகரம், சீ.வீ.கே. சிவஞானம், தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (உ-4)

## பிரதமர் ரணிலின் உறவினர் எனக் கூறி பணமோசடி செய்த இளைஞன் கைது

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் உறவினர் எனக் கூறி பொது மக்களிடம் இருந்து சுமார் ஏழரை லட்சம் ரூபா வரை மோசடி செய்த இளைஞர் ஒருவரை கிரிலப்பனை பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்தனர்.

பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகையின் பின் புறத்தே வசித்து வந்த ரொமேஷ் பெரேரா (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

பிரதமருடன் தமக்கு நெருங்கிய நட்பு இருப்பதாக கூறிவந்த இவர் மதுபான விற்பனை நிலையத்திற்கான அனுமதி பெற்றுத் தருவதாகவும் டிப்பென்ரர் வாகனங்களை மலிவு விலையில் பெற்றுத் தருவதாகவும் கூறியே பலரிடம் பணமோசடி செய்துள்ளான் பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து கைது செய்யப்பட்ட இந்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக மோசடிப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (தி-8)

### வடக்குக் கிழக்கு உள்ளூராட்சி

## தேர்தல் ஒத்திவைப்பு புளொட வரவேற்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதை மக்கள் விடுதலைக்கழகம் வரவேற்றுள்ளதுடன் மீண்டும் தேர்தல் நடத்தப்படும் போது புதிய வேட்பு மனுக்கள் கோரப்படக் கூடாது என அக் கட்சியின் தலைவர் சித்தார்தன் கோரியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இத் தேர்தலில் போட்டி இடுவார்கள் ஆனால் புதிய வேட்பு மனுக்கள் கோரப்படுவதை கட்சி வரவேற்கும் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிய வேட்பு மனுக்கள் கோரப்பட்டு விரைவில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் கோரியுள்ளது என கட்சியின் உப தலைவர் எம்.எல்.ஏ.எம். கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு பகுதிகளில் இத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகளின் கைகளில் நிர்வாகம் ஒப்படைக்கப்படுவதன் மூலம் பல் வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

புதிய வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற பொது ஜன ஐக்கிய முன்னணி உட்பட எதிர்க்கட்சிகளின் ஆதரவை பெற்றுக் கொடுக்கவும் எமது கட்சி தயாராக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத்தேர்தல் நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டமையை ஏற்றுக் கொள்ள முடியாது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களிலாவது புதிய வேட்பு மனுக்கள் கோரப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ் உள்ளூராட்சித் தேர்தல் நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வரவேற்றுள்ளமையும் குறிப்பிட்தக்கது. (தி)

## உள்ளூராட்சித் தேர்தலை விரைந்து நடத்துமாறு மு.கா. கோரும்

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மூன்று மாதங்களுக்குள் உள்ளூராட்சித்தேர்தலை நடததுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை கோரவுள்ளது.

இதுதொடர்பான தீர்மானம் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அதியுயர் பீடக்கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என கட்சியின் தவிசாளரும் வீடமைப்பு பிரதியமைச்சருமான வசீர் சேகுதாவு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை கால தாமதமின்றி நடத்துமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை சந்தித்து வலியுறுத்தப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 25ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டிருந்த இத்தேர்தலை அரசாங்கம் 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு ஒத்தி வைத்துள்ளமையும் குறிப்பித்தக்கது. (தி)

### தினசரி தியானம்

## கடவுள் உணர்வு

உலக இன்பங்களிலிருந்து உங்கள் மனதை விடுவிக்க விரும்பினால் மனதைக் கடவுள் உணர்வில் ஈடுபடுத்துங்கள். எந்த உணர்வும் கடவுளால் உந்தப்பட்டு வரட்டும். பார்வையின் தூண்டுதலால் கடவுளை எல்லா இடங்களிலும் பாருங்கள். காதின் தூண்டுதலால் எல்லாப் பேச்சுக்களிலும் அவர் நாமத்தைக் கேளுங்கள். உங்கள் உண்மை முழுவதையும் அதன் எந்தப் பகுதியும் வேறு உணர்ச்சிகளுக்கு ஆட்படாதபடி, இறைவனிடம் தாருங்கள். இந்திரியம் அல்லது உணர்வுகள் தாமாகவே மடியும். இறுதியாக நீங்கள் அழியாத பேரின்பத்தை அடைவீர்கள்.

**சுவாமி சிவானந்தர்**

## 95தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மேலும் 95 தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏதாவது ஒரு பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் தொண்டர் ஆசிரியர்கள், ஏற்கனவேயுள்ள தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரப் பட்டியலில் இருந்து விடுபட்டிருந்தால் அவர்கள் உடனே மேன்முறையீடு செய்யலாம்.

அவ்வாறு செய்யப்படும் மேன்முறையீடு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் போது அவர்கள் நிரந்தர நியமனத்தை பெறும் வாய்ப்பை பெற்றக் கொள்ளமுடியும்.

இதேவேளை வடக்குக் கிழக்கில் கடமையாற்றி வரும் 905 தொண்டர் ஆசியர்களுக்கு கடந்த வாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-10)

# கொழும்பில் பாதுகாப்புத் தீவிரம் தமிழர்கள் மீது படையினர் கெடுபிடி

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் தாக்குதல்களிற்குத் தயாராகி வருவதாகவும் விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல்கள் பற்றி புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே பாதுகாப்புக் கெடுபிடிகளும், சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாதம்பைப் பகுதி நேற்று முன்தினம் பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் பொதுமக்கள் அனைவரும் மைதானம் ஒன்றிற்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை கொழும்பு நகரில் டார்லி வீதிப்பகுதியும் நேற்றைய தினம் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு நகரிலும் வீதித் தடைகளும், சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டு கடுமையான சோதனை நடவடிக்கைகளும் தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (த)

## புலிகளின் பிரசாரப் பொருட்கள் சுங்கப் பகுதியினால் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திற்கு கொள்கலன்கள் மூலம் கொண்டுசெல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் பிரசாரப் பொருட்கள் சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்ட பொருட்களில் தமிழீழத் தேசியத் தலைவரின் புகைப்படத்துடன் கூடிய கீரெக், விடுதலைப் புலிகளின் கொடி, ஸ்ரிக்கர் மற்றும் புத்தகங்கள் என்பன அடங்கியிருந்ததாக சுங்கப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்பட்ட இப்பொருட்களை விடுதலைப் புலிகள் வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு சுங்கப்பகுதி உயர் அதிகாரிகள் பணித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன (வ)

**மீண்டுமொரு...**

சகல நடவடிக்கையும் எடுக்கும்.

நாட்டில் உள்ள சகல இடதுசாரிக்கட்சிகளும் என்னுடைய ஆதரவை எதிர்நோக்கியுள்ள நிலையில் பொதுஜன ஐக்கிய முன் னணியில் ஜே.வி.பியும் சேர்ந்து கொள்ளலாம்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவும் ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் றோகண விஜயவீராவும் பல கொலைகளைச் செய்துள்ளனர். ஆனால் ஜே.வி.பிக்கு இன்று இளம் தலைமைத்துவம் ஒன்று கிடைத்துள்ளது.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்றால் ஜே.வி.பியுடன் ஏன் நாங்கள் ஒப்பந் தம் செய்து கொள்ளக் கூடாது என்ற கேள்வியையும் ஜனாதிபதி இக் கூட்டத்தில் எழுப்பினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 14வது தேசிய மாநாட்டில் கட்சியின் 950 பேராளர்கள் கலந்து கொண்டார்கள். இம் மாநாட்டில் 12 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ம)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான விரிவுரைகள் யாவும் வழமை போன்று நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பி. பகீரதன் கேட்டுள்ளார். (த-5)

## பெண் மீது பாலியல் சேஷ்டை தப்பியோடிய குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட சமயம், ஆஸ்பத்திரியிலிருந்து தப்பியோடிய மூன்று குடும்பஸ்தர்களில் ஒருவர் நேற்று சுழிபுரத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி திருநெல்வேலியில் பெண் ஒருவர் மீது பாலியல் சேஷ்டையில் ஈடுபட முயன்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனைக்காக அன்றிரவு யாழ்.போதனா வைத் தியசாலைக்கு அழைத்துவரப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்ட அவர்கள் மூவரும் மதுபோதையில் இருந்தார்களா என்பது குறித்து சட்ட வைத்திய அதிகாரியினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பொழுது யன்னல் வழியாக பாய்ந்து தப்பி ஓடி தலை மறைவாகினர்.

பொலிஸார் உடனடியாகத் தேடுதல் வேட்டை நடத்திய போதும் அவர்களை கண்டு பிடிக்கவில்லை.

நேற்றைய தினம் தப்பியோடிய மூவரின் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (த-4)

## விசாரணை அறிக்கை இவ்வாரம் வெளியாகும

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று இலங்கை கடற்படையினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு இவ்வாரம் சமர்ப்பிக்க உள்ளதாக கண்காணிபபுக் குழுப் பேச்சாளர் திருமதி அன்னாஸ் அறிவித்துள்ளார்.

கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளிடமும் இலங்கைக் கடற்படையினரிடமும் தனித்தனியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இறுதி அறிக்கை கண்காணிப்புக் குழுவினால இவ்வாரம் வெளியிடப்படவுள்ளது. (வ)


## மலிவு விற்பனை

30 யூன் 2003 மட்டும்!

**Mobile Phones;**

| | |
|---|---|
| Ericsson G-628 | Rs.3900/= |
| Motorola T-190 | Rs.11400/= |
| Siemens C-35 | Rs. 9900/= |
| Nokia 3310 | Rs. 11000/= |

**Computers;**

| | | |
|---|---|---|
| P-I | 166 MHz | Rs. 14400/= |
| P-I | 200 MHz | Rs. 15900/= |
| P-II | 350 MHz | Rs. 24600/= |

All with full Multimedia and SVGA 15" Colour Monitor

Internet Surfing - Rs. 40/= per hr per min.   Net2 Phone calls - Rs. 7/=

மாணவர்களிற்கு 1 மணித்தியாலத்தில் INTERNET & E- MAIL பற்றிப் பயிற்சியளிக்க Rs. 50/= மட்டுமே!

North East Technologies, No.34, Saddanathar Road, Nallur, Jaffna.

Tele; 021-2223786, 0777-708498 (Hotline) Wep site; www. net . slt. lk (C/6300)

## புனிதவளன் கத்தோலிக்க அச்சக கட்டிடத் தொகுதியில் காரியாலயம் விற்பனை நிலையம் வாடகைக்கு

13[1]x 40[1] விஸ்தீரணமுள்ள இடம் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. யூன் மாத முடிவிற்குள் தொடர்புகொள்ளவும்

The Manager,
St.Joseph's Catholic press complex
360, main street,
Jaffna. T.P.2222378

(C/6299)

# உங்கள் வலம்புரியின் வாரமலர் சங்குநாதம்




- ✳ புலிகளின் கப்பலை மூழ்கடித்த சூத்திரதாரி யார்?
- ✳ சமாதான முயற்சியில் இந்தியா ஊடுருவல்
- ✳ புலிகளை அதட்டும் ஆமிடேஜ்
- ✳ வியாசரின் பதில்
- ✳ செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- ✳ ஆலடி மாநாடு
- ✳ பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை...)

இன்னும் பற்பல

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

# சங்குநாதம்

விலை 14/


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.